



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



கேணல் கிட்டு
(சதாசிவம் கிருஷ்ணகுமார்)
வல்வெட்டித்துறை.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



லெப். கேணல் குட்டிசிறி
(இராசையா சிறிகணேசன்)
சுதுமலை, மானிப்பாய்.

Tamileelam Archive



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



மேஜர் வேலன் (மலரவன்)
(சுந்தரலிங்கம் சுந்தரவேல்)
வியாபாரிமூலை, பருத்தித்துறை.



கடற்புலி கப்டன் குணசீலன்
(சேகரன் குரூஸ் மைக்கல் ஜீவா)
உதயபுரம், யாழ்ப்பாணம்.



கடற்புலி கப்டன் றொசான்
(இரத்தினசிங்கம் அருணராசா)
நல்லூர், யாழ்ப்பாணம்.



கடற்புலி கப்டன் நாயகன்
(சிவலிங்கம் கேசவன்)
பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



கடற்புலி கப்டன் ஜீவா
(நடராசா மார்க் ஜெயராஜ்)
பாசையூர், யாழ்ப்பாணம்.



கடற்புலி லெப். நல்லவன்
(சிவஞானசுந்தரம் ரமேஸ்)
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.



கடற்புலி லெப். அமுதன்
(அலோசியஸ் ஜான்சன்)
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.



கடற்புலி தூயவன்
(மகாலிங்கம் ஜெயலிங்கம்)
கண்டிவீதி, யாழ்ப்பாணம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ இலட்சியம் நெஞ்சிலே
சுமந்து - 16.01.1993 அன்று இந்திய
அரசின் சதியால் வங்கக் கடலில்
மரணித்த அனைத்துப்
போராளிகளுக்கும் எமது

**வீரவணக்கங்கள்**

- விடுதலைப்புலிகளின் வெளிநாட்டுக் கிளைகளும்,
- விடுதலைப்புலிகளின் சர்வதேசச் செயலகமும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

*வெளியீடு:*


**தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலகம்**

54 TAVISTOCK PLACE,
LONDON WC1 9RG,
UNITED KINGDOM

Tamileelam Archive

# கிட்டுவின் எண்ண ஓடையில் பயணம்

"நான் களத்தில் இருந்த காலத்தில் அவதானித்திருக்கிறேன், போராளிகள் மிகநெருக்கடிக்கு உள்ளாகும் போது, மக்கள் சுக வாழ்க்கை வாழ்வதாகவும் தாம் கஷ்டப்படுவதாகவும் கருதிக்கொள் வதை. இவ்விடயத்தை எமது தோழர்களுக்கு நன்கு புரியப்படுத்தியுள் ளேன். சனங்கள் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் வாழவேண்டும் என்பதற்காகவேதான் நாம் போராடுகின்றோம். போராட்ட காலகட் டத்திலும் நாம் அதற்கு வழி செய்ய வேண்டும். அப்படி மக்கள் சந்தோசமாக வாழ்கின்றார்கள் என்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைய வேண்டும். அதே வேளை மக்கள் தேவையான நேரங்களில், தேவைக் கும் அதிகமாக பங்கெடுத்து வருகின்றனர் என்பதை நாம் மறந்துவி டக்கூடாது."



**"எனது எண்ணங்கள்"** என்று கிட்டர் எழுதி வைத்த ஏட்டில் சில வரிகள் இவை. புயலுக்குள் சிலிர்த்து நிற்கின்ற ஒரு மரத்தில் மலர்ந்த மலர்களாகவே அவை எனக்குப்பட்டன. கடுமையான போராட்ட வாழ்வின் அனுபவப் பதிவுகளாக அவை மிளிர்ந்தன.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வசந்தகால இனிமை அங்கு குறைவாயினும், தமிழீழ மக்கள் அனைவரதும் வளமான வாழ்வுக்காக ஏங்கும் கனவும், ஆழமான அன்பின் கனிவும் அவரது எழுத்துகளில் ஊறிப்போயிருந்தன. விடுதலை வேட்கையின் வெளிப்பாடாகவும், அதனைச் சாதிப்பதற்கான நடைமுறைக் கருத்துக்களாகவும் அவை முகை அவிழ்த்தன. போராட்டத் தலைவன் ஒருவனின் வழிகாட்டலாகவும், மக்கள் தொண்டன் ஒருவனின் சேவகக் கடமையாகவும் அவை செயல் வேகம் கொண்டிருந்ததோடு, தானே முன்னோக்கிப் பாய்ந்து பாதை காட்டும் அம்புக்குறியாக அவரது நெறிகள் காணப்பட்டன. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இயக்கும் சக்திகளில் ஒன்றாக நின்று அவரது குரல் வெளிப்பட்டதால், அது தற்காலத் தமிழர் வரலாற்றின் குரலாகவே ஓங்கி ஒலிக்கின்றது. போராட்டத்தை அடியொற்றி அவர் தொட்ட விடயங்களில் சிலவற்றைப் பார்ப்போம். அதன் மூலம் அவர் மனதின் ஆழத்தையும், அகலத்தையும் நாம் புரிந்து கொள்ளலாம்.

தலைவர் பிரபாகரனைப் பற்றி அவர் எத்தகு பரந்த கருத்து வைத்திருந்தார். "எமது தலைவர் பிரபாகரன் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் மட்டுமல்ல; அடக்குமுறைக்கு எதிராகப் போராடும் ஓர் தேசிய இனத்தின் தலைவர். இன்று விடுதலைக்காகத் தம்மைத் தியாகம் செய்யத் தயாராக நிற்கும் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கும், எமது ஆதரவாளர்களுக்கும் மட்டும் அவர் தலைவர் அல்ல. எம் மீது அதிருப்தி கொண்டவர்களுக்கும், எம்மை எதிர்ப்பவர்களுக்கும் அவர் தலைவர் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். தப்புச் செய்தவன், செய்யாதவன் அனைவர்க்கும் அவர்தான் தந்தை. பாதிக்கப்பட்டவனுக்கும், படாடோபமாக வாழ்பவனுக்கும் அவர்தான் தந்தை."

போராட்டப் பணி குறித்து அவரது அபிப்பிராயம், அவரது முழுமையான அர்ப்பணிப்புக்கு வெளிச்சமிடுகின்றது. "போராளிகள் மீது சுமத்தப்பட்டிருக்கும் பணி பெரியது; சுமையும் பெரியதுதான். ஆனால் நாம் அதை விருப்பத்துடன்தான் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். எதிரிக்கு எதிராகப் போராட வேண்டிய நிலையில் நாட்டை நிர்வகிக்கும் பணிகளும் எம்மீதே சுமத்தப்பட்டுள்ளது. இது மிகப் பெரிய சுமைதான். ஆனால் இதை விருப்பத்துடன் சுமக்கிறோம்; சுமக்க வேண்டும். இது சுமையல்ல; எமது கடமை. இதைச் சுமையாகவோ, கஷ்டமாகவோ நாம் நினைத்தால் நாம் போராட்டத்துக்குத் துரோகம் இழைத்தவர்களாகின்றோம். இயக்கமானது தனது வீரர்களை இத்தகைய சுமைகளைத் தாங்கிக்கொள்ளக் கூடிய விதத்


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தில் தயார்ப்படுத்த வேண்டும். இல்லாவிடின் துவக்கைத் தூக்குவதும், எதிரிக்கு எதிராகப் போரிடுவதும்தான் போராட்டம் என்றாகிவிடும்."

தமிழீழம் என்பது என்ன என்ற கேள்விக்கு "தமிழ் மக்களது உரிமைகளின் மொத்த வடிவம்" என்கிறார்.

சித்தாந்தம் குறித்து, சொல், செயல் வடிவங்களை இணைத்துப் பார்க்கும் பார்வையைக் கொண்டிருந்தார். "சித்தாந்தங்கள் வெறும் ஏட்டுச்சுரைக்காய் அல்ல. பல சித்தாந்தங்கள் உலகில் நடைமுறையில் பெற்ற வெற்றிகளைக்கொண்டு எழுதப்பட்டவையே. உலகில் நடைமுறையில் பல பிரச்சினைகளைக் கண்டும், பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும் பல தலைவர்களால் கடைப்பிடிக்கப்பட்ட வழிமுறைகளும் சித்தாந்தம் எனப்படுகின்றது. சில சித்தாந்தங்கள் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக அத்தலைவர்களின் எண்ணத்தில் உதித்த சிந்தனைகளேயாகும். நாம் சித்தாந்தங்களையும், அவற்றைக் கூறுபவர்களையும் இனம் கண்டு பின்பற்ற வேண்டும்."

வெளியில் நிற்கும் புத்திஜீவிகளை போராட்டத்துடன் இணைத்தல் என்ற விடயத்தில் இவரது கருத்து இதுவாக உள்ளது. "புத்திஜீவிகளை ஒன்று சேர்த்து 'சிந்தனைத் தடாகம்' ஒன்றை உருவாக்க வேண்டும். போராட்டத்தில் அரசியல், இராஜதந்திர நகர்வுகள் போன்ற விடயங்களில் நல்ல கருத்துக்கள் எமக்குத் தேவையாக உள்ளது. இக் கருத்துக்கள் சரியான தகைமையும் கல்வியும் உள்ளவர்களிடமிருந்தே வழங்கப்படல் வேண்டும். தேவைப்படும் நேரத்தில் மாத்திரம் அவர்களை அணுகும்போது அவர்கள் எமது நிலைமைகளைச் சரியாகப் புரிந்து கொள்ளாதவர்களாக இருப்பார்கள். எனவே எம் போராட்டப் பாதையிலேயே அவர்களை இணைத்துக் கொண்டு செல்வதன் மூலமே புத்திஜீவிகளையும் சரியான பாதைக்குக் கொண்டு செல்ல முடியும்."

திட்டமிடுதல் பற்றி அவர் குறிப்பிடுகையில், "இயக்கம் செய்யும் ஒவ்வொரு விடயமும் திட்டமிட்டே செய்யப்படல் வேண்டும். திறந்த மனத்துடன் அமைந்த கருத்துப் பரிமாற்றங்களின் மூலமே சிறந்த திட்டங்களைப் பெறமுடியும். நாம் ஒவ்வொரு காரியத்தையும் திட்டமிட்டுச் செய்வோமானால், மிகச்சிறந்த பலனையும், வெற்றியையும் அடைய முடியும்."

கல்வி பற்றிய அவரது கருத்தில் மனிதம் விரவி நிற்பதைக் காணலாம். "வறிய மக்களும், ஒடுக்கப்பட்ட மக்களும் கல்வி அறிவு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பெறவேண்டும் என்பதிலேயே நாம் எப்போதும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்."

மக்கள், மக்கள் என்று உயிரைவிடும் கிட்டுவின் மக்கள் பற்றிய கருத்து இவ்வாறு உள்ளது. "நாம் மக்களுக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் அதை நாம் வெறுமனே கூறிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அதை மக்கள் உணர வேண்டும். உணர்வதற்கு முன்னர் மக்கள் நம்பவும் வேண்டும். விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் ஒவ்வொரு வேளையிலும் நாம் மக்களைத் தெளிவுபடுத்தி எமது இலட்சியப் பாதையில் அழைத்துச் செல்ல வேண்டும். இயல்பாகவே விடுதலைப் போராட்டத்தில் மக்கள் அளவிட முடியாத துன்பங்களுக்கு ஆளாகும் சூழ்நிலை உருவாகின்றது. அவ் வேளைகளில் மக்களிடையே சிலர் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதையும், மக்களிடையே ஒரு குழப்ப நிலை உருவாகுவதையும் அவதானிக்க முடிகின்றது. அவ்வே ளையில் நாம் எமது நோக்கங்களைத் திறந்த மனத்துடன் மக்கள் முன் வைக்க வேண்டியவர்களாகின்றோம். இந்நடவடிக்கையானது அடிக்கடி செய்யப்பட்டு வரவேண்டும்." தொடர்ந்து அவர் கூறுகை யில் "நான் என் சனங்களின் தலைவனாகவோ, அல்லது எசமானா கவோ இருக்க விரும்பவில்லை. மக்களில் ஒருவனாகவே இருக்க விரும்புகிறேன்." என்கிறார்.

பொங்கிப் பிரவகிக்கும் அவரது எண்ணவலைகள் முழுமை யையும் இச்சிறு கட்டுரையினுள் அடக்க முடியாது. ஆயினும், அவரது மனவோடையில் நாமும் சிறிது பயணம் செய்வதன் ஊடா கப் பெறும் அவரைப் பற்றிய பார்வை, உண்மையைத் தரிசிக்க உதவும் என்று எண்ணுகின்றேன். அவரின் நினைவோடு நாம் தொடர்ந்து உறுதியாக இலக்கு நோக்கிப் பயணித்தலே அவருக்கு நாம் செய்யும் வீரஅஞ்சலியாகும்.

**- திலகர் -**


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

## தண்ணீரில் ஓர் தகனம்

சொல்லாமல் கொள்ளாமல்,
நம்பமுடியாமல்
உசுப்பும் கடல் அலையில்
உவர் காற்று வெளியினில்
அந்தச் சோக நாடகம்
தொடங்கி முடிந்தது.

களத்தில் போர் முரசு!
வியூகத்தில் வீரர்கள்!
எங்கள் கிட்டண்ணா இனி
இல்லவே இல்லையா?
எங்கள் தங்கம்
தன்னைத் தானே
தகனம் செய்து கொண்டதோ?
அந்த
பல்கலைக் கழகத்தை
பறிகொடுத்து விட்டோமோ?
நெஞ்சில் எரிமலை
கண்ணில் பெருமழை!

தீராத தாகத்துடன்
தீ நாக்குகள் அந்த
நிமிர்ந்த முகம் நோக்கி
நீண்டபோது...
அந்த அனல் கணங்களில்
தம்பியை நினைத்திருப்பான்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழ் மண்ணையும் தான்
நேசித்த மக்களையும் நினைத்திருப்பான்
ஈற்றில் தன்
சகியை நினைத்திருப்பான்.

அன்று,
திருவில் வெளியில் தீவளர்த்தோம்; மட்டு
மாமங்க வீதியில் மனம் வெந்தோம்.
நல்லை மண்ணில்
கைபிசைந்து நின்றோம்
நம்பிக்கைத் தூதில் தோற்றோம்;
தொடர்ந்த
துரோகங்களைத் தாண்டியும்
நம்பிக்கையுடன் நடந்தோம்.
மீண்டும்.....

நீளக்கிடக்கின்ற
பாரதக் கரையெங்கும் எம்
காவலர் கலந்து விட்ட
கடல் வந்து மோதும்;
ஆண்டாண்டும் அலைவந்து
துரோகம் சொல்லித் தூற்றும்;
காந்தி தேசத்தின்
கரைகளை அரிக்கும்
கயவரை
கடல் கொள்ளும்.

*- சோதியா -*


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# எங்களின் தளபதி

## - சில நினைவுகள்

ஆம்... அந்த மனிதரை நினைத்துப் பார்க்கிறேன். சிறையிலிருந்து மீண்ட சில நாட்கள். யாழ். பிராந்தியத் தளபதியாக அவர் குடாநாட்டு மக்களின் உள்ளங்களில் குடிகொண்டிருந்த காலம். முப்பத்தியொரு மாதங்களை இருண்ட உலகில் அடைத்துப் போராட்ட உச்ச வாழ்வினைத் தரிசியாத எனது தனிமை உளப் பாங்கு; அது உன்னிப்பாகக் குடாநாட்டுச் சூழ்நிலையை அவதானிக்கும் அவாவினைத் தோற்றுவித்திருந்த சூழல்.

அந்த வேளை.

தமிழீழ தேசவிடுதலைப் போராட்ட வரலாற்றின் புதிய அத்தியாயங்கள் புரட்டப்பட்டுக்கொண்டிருந்த காலகட்டம். இராணுவம் முகாம்களுக்குள் முடக்கம். சிவில் நிர்வாகம் போராளிகளால் ஒருங்கிணைப்பு. பெங்களூரில் அரைகுறைச் சலுகைகளை ஏற்க தலைவர் பிரபாகரன் மறுப்பு. இந்திய அரசு தமிழகத்தில் புலிகள் மீது அதிரடிப் பாய்ச்சல். தளபதி கிட்டுவின் கைதிகள் பரிமாற்றம்.தேசியத் தலைவர் தமிழீழத் தளம் திரும்புதல். இவையெல்லாம் அவற்றுள் அடக்கம்.

தலைவர் பிரபாகரன் தமிழீழத்திற்கு வருகை தரும் வரை அவரது வழிகாட்டலை ஏற்று வடமுனையில் தமிழீழ தேச வரைபடத்தினை தளபதி கிட்டு வரைய ஆரம்பித்த அந்தவேளைகள்.

குடாநாட்டுச் சிறுவர்கள் கிட்டுமாமா என்றும், நடுத்தர வயதினர் கிட்டண்ணா என்றும், முதியோர் கிட்டர் என்றும் அன்பாக ஆழமாக நேசித்து உச்சரித்த அந்தப் பொழுதுகள்...

போர் முனையிலே அஞ்சா நெஞ்சனாக எதிரி இராணுவத்தை விரட்டியடிக்க அணியின் முன்னணியிலே அவர் செயல்பட்ட விதம்; எதிரிகளையும் ஒப்புக்கொள்ளவைத்த அந்த உண்மைகள்; கெரில்லா போர்க்கலையின் தந்திரியாக; சிறிலங்கா இராணுவத்தினரை அவர் திணறடித்த பலநூறு சந்தர்ப்பங்கள்; சிறந்த நிர்வாகியாக சகபோராளித் தோழர்களை கட்டுக்குள் அடைகாத்த ஆளுமை வெளிப்பாடுகள்; இராணுவம், தொழில்நுட்பம், சமூகம், பொருளாதாரம்,

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கலை, பண்பாட்டு, ஆன்மீகம் என அனைத்தையும் அலசிப் பார்த்த தொலைதூர நோக்கு.



23.11.86ல் நல்லூரில் தளபதி கிட்டு

87களின் முற்பகுதியில் தேசத்தை நேசித்த அந்த மனிதனிடமும் தேசவிடுதலைப் போராட்டத்திடமும் நான் உள்வாங்கிக் கொண்டவை இவைகள். 87களின் பிற்பகுதியில் தமிழகத்தில் அவர் உலாவந்த காலம், இந்திய இலங்கை ஒப்பந்தமும் முறிவுகளும் முரண்பாடுகளும் தமிழீழ தேசவிடுதலைப் போராட்டத்தில் திடீர்த் திருப்பங்களைத் தோற்றுவித்திருந்த வேளை. ஒரு புறம் இந்திய அரசின் தமிழீழத் தேசியம் மீதான மேலாதிக்கத்தை எதிர்த்து தமிழக மக்களையும் இந்திய மக்களையும் அணிதிரட்ட அவர் வகுத்த வியூகங்களாகத் தொடர்கின்றது. மறுபுறம் இந்திய அரசுடனான பேச்சு வார்த்தைகள் மூலமாக இராஜதந்திர ரீதியில் இந்திய அரசுக்கு அவர் கொடுத்த அழுத்தங்கள். 88களில் தமிழகம் அடங்கிலும் அவரினதும், விடுதலைப் போராளிகளினதும் கைதும், விடுதலைப் புலிகள் அலுவலகங்களுக்கு சீல் வைப்பும், மருத்துவ சிகிச்சை வசதிகளுக்கு தடையுமாக நீளுகின்றது. சிறையில் அவரது உண்ணா விரத அறிவிப்பும், அனைத்துப் போராளிகளும் அவரும் நாடுகடத் தப்பட்டு தமிழீழத்தில் இந்தியச் சிறைகளில் அடைபடுதலும், அவரும், இன்னும் அங்கவீனர்களான சில போராளிகளின் விடுதலை அடைதலும் தொடர்ந்த சம்பவங்கள்..


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



திரு. ப. நெடுமாறன், திரு. வீரமணியுடன் தளபதி கிட்டு

மீண்டும் அவர் வன்னிக் காடுகளில் தேசியத் தலைமையோடு கலக்கின்றார். அது அடக்குமுறைகளுக்கெதிரான தொடர்ச்சியான ஆயுதப் போராட்டத்தில் அவரின் பங்களிப்பாக மீண்டும் வடிவம் பெறுகின்றது.

மீண்டும் இராஜதந்திரியாக விடுதலைப்புலிப் பிரதிநிதிகளோடு கொழும்பு விஜயம். அனைத்துலகச் செயற்பாட்டுக்காக லண்டன் வருகை. கடல் கடந்த நாடுகளில் அமைப்பு வேலைகளில் துரிதகதி. வேற்றுநாட்டு உறவுகள், மனித உரிமை நிறுவனங்களோடு கலந்தாலோசனைகள், வெளிநாட்டு அரசுப் பிரதிநிதிகளோடு தீர்வுக்கான முன்னெடுப்புக்கள் என உயர் வடிவம் பெறுகின்றது.

இந்திய அரசின் பலமான அழுத்தம் காரணமாக அவர் பிரிட்டனிலிருந்து வெளியேறுவதற்கான வேறு பல காரணங்கள் கூறப்பட்டு புறப்படுமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறார்.ஆதலால் பிரிட்டனை விட்டு வெளியேறிய அவர் சுவிசுக்குள் நுழைவதற்கான சந்தர்ப்பம் கிட்டுகின்றது. சுவிசில் அவரோடு மிகவும் நெருங்கிப் பழகுவதற்கும் அவரின் கீழ் பணியாற்றுவதற்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

அவரின் வழிகாட்டலில் அவரிடம் நான் கற்றுக்கொண்ட பாடங்கள் பல. அந்த வரிசையில் சிறந்த நிர்வாகம், அரசியல்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நுணுக்கம், பரந்த நோக்கு, மானுட நேயம் எனப் பலவகையான விடயங்களை வரிசைப்படுத்திக் கொள்ளலாம்.

சதா ஓயாது எந்த நேரமும் தேசவிடுதலை பற்றியே அவர் சிந்தித்தார். சிந்தனையைச் செயல்வடிவமாக்க திறன் படைத்த பல இளைஞர்களை முடுக்கிவிட்டார். பொதுக்கூட்டங்களில் மக்களை எழுச்சிகொள்ளும் விதத்தில் உரையாற்றினார். பல பத்திரிகைகளில் தொலைநோக்கோடும் சமகால நிகழ்வோடும் ஒட்டிய கட்டுரைகளை எழுதினார். போராட்டத்தின் வெளிப்பாடுகளை நவீன ஓவியங்களில் படைத்தார். "விடுதலைக்கான வேலைத்திட்டங்களில் சிலவற்றையே நாம் செய்துகொண்டிருக்கிறோம். செய்யப்பட வேண்டிய ஏராளம்" என ஆதங்கப்பட்டார். அவற்றுள் மிகப்பெரிய பணி ஒன்றினைத் தாங்கி குமுறியடிக்கும் சுழற்காற்றையும் கொப்பளித்த உவர் கடலலைகளையும் ஊடறுத்து ஆழக்கடலில் நீல நெடுவான் பரப்பில் தாயகத்தை நோக்கிப் பயணித்தார்.

மீண்டும் தென்னாசியப் பிராந்தியத்தின் பொலிஸ்காரனால் வழிமறிப்பு. தேசவிடுதலைப் போராட்டத்தில் தலைவர்களையும் தளபதிகளையும் அழிக்கும் இந்தியப் பேரரசின் வலைப்பின்னல் தளபதி கிட்டுவையும் சகபோராளிகளையும் குரூரமாக ருசிபார்க்கத் துடிக்கின்றது. தேசத்தை மீட்க தேசியத்தைக் காக்கக் கப்பல் சிப்பந்திகளைத் தப்பவைத்து சகபோராளிகளோடு எம் இதய வானில் சிறகடித்துப் பறந்த அந்த உதயத்து உருவகம் தீயோடு கலந்து.

தீயோடு கலந்து தேசமைந்தர்களின் இலட்சியங் காக்க அனைத்து தமிழீழ மக்களையும் அணிதிரட்டுவோம், அணிதிரளுவோம். எமது பணி தொடரட்டும்.

**இவ்வண்ணம்**
**ந. முரளிதரன்**



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# நேரில் பார்த்ததை நினைத்துப் பார்க்கின்றேன்.

தமிழர்கள் தலைமுடிகள் முகரப்பட்டு, சிங்கள வீதிகளில் சிரச்சேதம் செய்யப்பட்ட ஐம்பதுகள் தமது வரலாற்றை எழுதிமுடித் துக் கொண்டபோது, சிவந்த தமிழீழ வானில் அவன் ஓர் அக்னிநட் சத்திரமாய் அவதரித்தான்.

காந்திப் பொல்லூன்றி, அஹிம்சைக் குடைபிடித்து, தமிழர் தலைமைகள் கொழும்புக்குக் கோச்சியேறிய வேளை, அவன் தந்தை தமிழரசில் ஒரு தளராத காந்தியத் தூணாக நிமிர்ந்து நின்ற செய்திக்கு வெளிச்சம் வேண்டியதில்லை.

அப்படியொரு பொழுதில் சத்தியாக்கிரகமிருந்த தமிழர்களை சிங்கள இராணுவம் புழுக்களாகப் போட்டு மிதித்தபோது, கிட்டு கிருஷ்ணகுமாராக வல்வை மண்ணில் தவழ்ந்துகொண்டிருந்ததைப் பார்த்தேன்.

அடி, உதை, அவமானங்களை மறந்து, காந்தியத் தலைமைகள் தங்கள் பிள்ளைகளை ஒக்ஸ்போட்டிலும், கேம்பிறிச்சிலும் அடுத்த தலைமையை ஏற்கத் தயார் படுத்திக்கொண்டிருந்த போது, ஒரு காந்தியவாதி கிட்டு வடிவில் போர்க்கொடி தூக்கியிருந் ததை அவதானித்தவர் யாருமிலர்.



தளபதி கிட்டுவின் தாயுடன் திருமதி அடேல் பாலசிங்கம்.

வீரத்தாயான கிட்டம்மாவின் சாயலில் அளவாக உயரமெடுத்து, வஞ்சகமில்லாப் பேச்சுக்களுடன் அவன் வலம் வந்த வேம்படிக்குத்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தெரியும்; அவன் ஓர் செல்வந்தப்பிள்ளையென்ற ரிஷிமூலம்.

வறுமைப் பாரமில்லா இளமையோடு, தலைசிறந்த பாடசாலையில் குதித்தோடி வந்த அந்தப் புதிய நதி கரைகளை உடைக்கவேண்டிய காலம்; தரப்படுத்தல் வடிவில் கனிந்ததென்று அவனே பின்பொருநாள் எழுதிவைத்ததைப் படித்தவர் பலர்.

அவன் குறிப்பிட்ட அந்த இடம்தான் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே செத்துப்போன தமிழனின் வீரவரலாறு மறுபடியும் சூல்கொண்டு திரும்பும் இரிசானதை பின்னாளில் சிங்களம் கண்டு திகைத்தது.

பிரபாகரன் என்னும் வீரப்பிரவாகம் தாய் நதியாய் ஈழத்திற்கு நீர்ப்பாய்ச்சிய அந்த வைகறைப் பொழுதுக்கு அப்படி ஒரு அடைமொழி கூறுவது அதிசயமல்ல.

அவன் கால் பட்டால் போதும், விழுந்து கிடந்தவனும் வீரனாய் கர்ஜிப்பானென்றால்; அந்த இராஜரிஷியுடன் இவன் கைகோர்த்துக்கொண்டபோது, அந்த உரசலில் திண்ணைவேலியில் தோட்டாக்கள் திடுதிடுவென வெடித்துச் சிதறியதில் வியப்பில்லை.

அன்றுமுதல் கிருஷ்ணகுமார் கிட்டுவாய் செதுக்கப்பட்டு, பகைவர்களைக் கிடுகிடுக்க வைத்த காட்சியைப் பார்த்துப் புறநானூறு தனது பக்கங்களை மூடிக்கொண்டது.

அப்பொழுதுதான் தமிழீழத்தில் புதிய புறநானூறு அச்சாகிக் கொண்டிருந்தது.

பகைவனின் நீரை வாயிலேந்திப் பின் உமிழ்ந்து, மானத்திற்காய் உயிர்விட்ட பண்டைத் தமிழ்வீரன் சேரமான் கணைக்கால் இரும்பொறையின் சாதனையை; வாயிலும் நீரேந்தாது உயிர்விட்டு முறியடித்தான் தியாகி திலீபன்.

மணமாலை வாடமுன்னர் களம் சென்று மாண்ட புறப்பாடல் வீரன் பூதப்பாண்டியன் புகழை உடைத்துப் புதுமை படைத்தான் தளபதி குமரப்பா.

வீரத்தின் கொடுமுடியானான் கப்டன் மில்லர்.

சங்கத்தின் பின்னர் பழமைப் புராணங்களாலும், ஆரிய ஆக்கிரமிப்பாலும் ஆடையிழந்த தமிழன்னை மறுபடியும் ஒரு புறநானூற்றால் தன்னைக் கம்பீரமாக அலங்கரித்துக்கொண்டபோது, கிட்டு வீரன் கழுத்துக்காய் வெற்றி மாலைகள் போட்டி போட்டுக்கொண்டிருந்தன.


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மார்க்சீயப் புத்தகத்தால் மாங்காய் விழுத்த முயன்றோரும், பக்கத்து வீட்டுக்காரனின் கன்னக்கோலை விடுதலை வாளென்று தூக்கிச் சுழற்றுவோரும் அகரத்தைத் தொடங்கியபோது; அவனோ தமிழீழத்தை அங்குலம் அங்குலமாக வியாக்கியானப் படுத்தி வைத்தான்.




1985ல் தளபதி கிட்டு

ஒரு சதாப்தம்தான் ஆயினும் அவன் வடித்த வீரத்தை எழுத தமிழில் புதிய வரி வடிவம் வரவேண்டுமெனப் புலவர்கள் மெச்சி நின்றனர்.

ஏனென்றால் அவன் வல்வைப் பொலிஸ் நிலையத்தை தனி மனிதனாக ஊடறுத்துப் பாய்ந்த வேகத்தை, யாழ். பொலிஸ் நிலை யத்தைத் தகர்த்த வீரத்தை, முன்நின்று படைநடாத்தும் ஓர்மத்தை துலக்கமுற ஒலிப்படுத்தின் தமிழும் தடுமாறுமே.

நானூறு வருடங்களின் பின் யாழ். குடாநாட்டை அவன் அன்னியரிடமிருந்து மீட்டபோது, மன்னன் சங்கிலியனே இறங்கிவந்து அவனுக்கு மரியாதை செலுத்தி மாலை சூடியிருப்பானென்பது யாரும் நினைக்கக்கூடிய நிஜமே.

அப்படியான எங்கள் கிட்டு வீரன் தற்கொடையானான் என்ற கறுப்புச் செய்தி காதுகளில் விழுந்தபோது உலகமெல்லாம் தமிழ் நிலவுகள் கறுத்தன.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



மக்களுடன் தளபதி கிட்டு

தரையில் திலீபனிடம் தோற்ற அந்தத் தந்திர தேசம், கடலில் கிட்டுவிடம் தன் தோல்வியைத் தழுவிக்கொண்டு, தனது போலிச் சாத்திரங்கள் வழியே அந்திமமான செய்தியும்; அவன் வீரமரண ஓலையின் அருகில் எழுதப்பட்டிருந்ததை அறிந்து அழுதோம்.

அந்தக் கொடிய செய்தி கேட்டபோது கிட்டு என்னும் மாவீர னின் இழப்புக்கு ஈடுசெய்ய உலகில் எதுவுமே இல்லையென்று வான மண்டலமே அதிர்ந்தது.

எந்தவொரு தாக்கத்திற்கும் எதிர்த்தாக்கம் சமம் என்ற பௌதிக விதியும் அவனை இழந்த தாக்கத்திற்கு சம அளவான தாக்கத்தை படைக்கமுடியாது பொய்த்துப் போனது.

எமது விடுதலை வரலாற்றை அணுஅணுவாய் பாடம்பண்ணி வைத்திருந்த அந்தக் காய்த்தல் உவத்தலற்ற கணணி தனது இயக் கத்தை நிறுத்திக்கொண்ட போது காற்றும் நின்றே நடந்தது.

மரணத்தை வென்ற மாவீரா! நீயோ பேரண்டமெங்கும் நிறைந்து பிரகாசமாகிவிட்டாய்.

உன் ஒளியை பார்க்க மனிதக் கண்களுக்கு வலுவில்லையாயி னும், நீ வாழ்ந்த காலத்தில் எனக்கும் வாழக்கிடைத்ததே என்னும் பெருமையை ஏந்திச்செல்வதைவிட என் பிறப்பிற்கு என்ன பெருமை. □□

**- கே.எஸ். துரை -**



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# எதிரிக்கு எதிராக ஒன்றிணைவோம்!

"ஈழத்தமிழன் நான் என்று என் நெஞ்சம் குளிர்ந்து நான் பெருமைப்படுகையில் என்கண்களின் முன் நீவிர் நிற்பீர்" என்று தமிழீழ விடுதலைப் போராளிகளை வியந்து பாடுகின்றது கவிதை ஒன்று. உண்மைதான். போராளிகள் ஈழத்தமிழனின் சரித்திரத்தை மாத்திரமல்ல அவர்களின் அந்தஸ்தினையும் மாற்றிவிட்டனர். உயர்த்திவிட்டனர். தமிழன் என்றால் யார் என்று உலகம் அறிந்திருக்கின்றது. "Tiger"என்றால் "ஒரு மிருகம்" என்பது ஒரு கருத்து. இன்னொரு கருத்து "ஒரு புகழ்பெற்ற விடுதலை இயக்கம்" என்று OXFORD அகராதி கூறுகிறது.

1958 இல் தமிழன் எந்தக் கோபத்தையும் ஏற்படுத்தாத நிலையில் தமிழனைச் சிங்களவர் தாக்கினர். 1977 இல் தமிழீழம் வேண்டும் என்று வாக்குப் போட்டதால் தமிழன் சிங்களவரிடம் அடிபட்டான். 1983 இல் 13 சிங்கள இராணுவச் சிப்பாய்களை போராளிகள் கொன்றுவிட்டதால் வீறுகொண்டு வெகுண்டெழுந்த சிங்களவர்கள் தமிழர்களை கொன்றனர். அதன் பிறகு சிங்களவர் வீறு கொள்ளவேயில்லை. 1992இல் ஜெனரல் கொப்பேகடுவ, கேணல் விமலரட்ண உட்பட சிறிலங்கா அரசின் பத்து நம்பிக்கை நட்சத்திரங்களை போராளிகள் தாக்கி அழித்தபோது, சிங்களவர்கள் தமிழர்களைத் தாக்கவில்லை. மாறாக சிங்கள அரசியல்வாதிகளை, அமைச்சர்களைத் தாக்கினர். 'ஏன் எங்கள் இனத்து இராணுவத்தினரைக் கொன்றாய்' என்ற கேள்வியுடன். 1983 இல் தமிழர்களை கொன்று குவித்த சிங்களவர் 1992 இல் தங்களது 'சூப்பர் ஸ்டார்கள்' இறந்தபோது 'ஏன் எங்கள் இராணுவத்தினரை தமிழ் பகுதிக்கு அனுப்பினாய்?' என்ற கேள்வியுடன் தங்கள் தலைவர்களையே தாக்கத் தலைப்பட்டனர். கடந்த 10 வருடங்களில் இந்த வியத்தகு மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

சமீபகாலம் வரை சிங்களப் பத்திரிகையாளர்களின் போக்கு சிங்கள அரசாங்கங்களுக்கு ஆதரவாகவே இருந்து வந்தது. இனவாதப் போக்கினை கடைப்பிடிப்பது குறித்து அவர்கள் வெட்கம்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கொண்டிருக்கவில்லை. ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. குறிப்பிடத்தக்க வகையில் சிங்களப் பத்திரிகையாளர்களும் மாறிவிட்டனர். உண்மையும் தர்மமுமே இறுதியில் வெல்லும் என்பதற்கேற்ப சிங்களப் பத்திரிகையாளர்கள் உண்மையை உணர்ந்து உண்மையை எழுதத் தலைப்பட்டு விட்டனர்.

"இது வெல்லப்படாத யுத்தம்" என்று ஒரு சிங்களப் பத்திரிகையாளர் எழுதுகிறார். புலிகள் இராணுவத்தினரைக் கொல்லும் போது இருபது ஆயுதங்களையாவது கைப்பற்றுகின்றனர் என்று இன்னொருவர் எழுதுகின்றார். புலிகள் இலங்கையின் எந்தப் பகுதியிலும் நின்று சண்டையிடக்கூடியவர்கள் என்று நிரூபித்துவிட்டனர். எனவே சண்டையை விடுத்துச் சமாதானம் செய் என்று அரசுக்கு அறிவுரை வழங்குகின்றார் இன்னொரு பத்திரிகையாளர். புலிகள் சுற்றிவளைக்கப்பட்டு விட்டார்கள் இனி அவ்வளவுதான் என்று சிறிலங்கா அரசுக்கு வக்காலத்து வாங்கிய 'இந்தியா டுடே' தனது சமீபத்திய கட்டுரையில் 'புலிகளின் புதிய யுத்த தந்திரம், இலங்கை அரசு தடுமாற்றம்' என்று விமர்சித்துள்ளது.

பல இராணுவத்தினர் பதவிகளைவிட்டு ஓடிவிட்டனர். புதிதாகச் சேர ஆட்கள் இல்லை. இனவாத உணர்வு கூடிய மாத்தறையில் இராணுவத்தில் சேர இரண்டு பேரே நேர்முகப் பரீட்சைக்கு வந்துள்ளனர்.

இந்தப் புதிய நிலமை, தமிழர்களைத் தோற்கமுடியாதென்ற புதிய சூழ்நிலை எப்படி ஏற்பட்டது? தளபதி கிட்டு, அவருடன் மன உறுதியுடன் தாயக தாகத்துடன் தன்மான உணர்வுடன் உயிர்விட்ட வீரவேங்கைகள் போன்றவர்களால்தான் என்பதை ஒவ்வொரு தமிழனும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

1985 முதலான ஒரு குறிப்பிட்ட காலத்தில் யாழ்ப்பாணம் கிட்டுவின் கட்டுப்பாட்டில் இருந்தது. யாழ்ப்பாணம் மீதான இலங்கை இராணுவத்தின் படையெடுப்பை அவர் இரு தடவை முறியடித்தார். 15ஆம் நூற்றாண்டில் நாம் போத்துக்கீசரிடம் எமது இறைமையை இழந்த பின்னர் இலங்கைத்தீவின் ஒரு பகுதியில் ஒரு தமிழாட்சியை, தமிழ் நிர்வாகத்தை ஏற்படுத்தியவர் மறைந்த மாவீரன் கிட்டுதான்.

பெரியவர்களால் 'கிட்டு' என்றும் இளையவர்களால் 'கிட்டண்ணா' என்றும், சிறியவர்களால் 'கிட்டுமாமா' என்றும் அழைக்கப்பட்ட தளபதி கிட்டு ஒரு செல்வந்த குடும்பத்தைச் சேர்ந்த


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

வர். ஒரு அச்சக உரிமையாளரின் மகனான அவர் நினைத்திருந்தால் பணத்தில் புரண்டு வளமான வாழ்க்கை வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவர் தமிழினத்தின் தலைவிதியை மாற்ற, அடிமை நிலையைப் போக்க தலைவர் பிரபாகரனுடன் இணைந்து காடுகளில் அல்லல் பட்டார். தளபதி கிட்டுவின் தரம் அறிந்து கப்டன் கொத்தலாவல என்ற சிங்கள இராணுவ அதிகாரி கோட்டைமுகாமிலிருந்து வயர் லசில் அடிக்கடி கதைப்பதுடன் கிட்டுவின் அனுமதியுடன் யாழ். வந்து பேச்சுவார்த்தையும் நடத்தினார். ஜே.ஆர். ஜெயவர்த்தனா தளபதி



**சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரிகளுடன் தமிழீழத் தளபதி கிட்டு**

கிட்டுவுடன் பேசுவதற்காக தனது அமைச்சரவையில் இருந்த வின்சன்ட் பெரேராவை யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தார். ஆனால் அந்தப் பேச்சு வார்த்தையை இந்தியா குழப்பிவிட்டது, தடுத்து விட்டது. இன்றும் அதுதான் நடந்திருக்கின்றது. தனக்குத் தெரியாமல் எந்தப் பேச்சு வார்த்தையும் நடக்கக்கூடாது என்று வில்லத்தனம் புரிந்திருக்கின்றது இந்தியா. தெற்காசியாவில் 'வட்ட விதானை' பதவியை தனக்குத்தானே வரிந்து கட்டிக்கொண்டு செயற்படுகின் றது அந்த நாடு.

தளபதி கிட்டு சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்றின் பொருட்டே தமிழீழம் நோக்கிச் சென்று கொண்டிருந்தார். மேற்கத் திய நாடுகள் தமது மத்தியஸ்தம் மூலம் இலங்கையில் இனப்பிரச்னை

தமிழீழ ஆவணகாப்பகம்
Tamileelam Archive

தீர்வுக்கு எடுக்கும் முயற்சிகளை இந்தியா விரும்பாது என்பது ஊகிக்கக்கூடியதே. தமிழீழ மக்கள் தங்கள் சுதந்திரத்தையும், பாது காப்பையும் சமாதானத்தினூடாகப் பெறுவதை இந்தியா விரும்பாது. இவ்விடயத்தில் மேற்குலகின் தலையீட்டைக் கிஞ்சித்தும் விரும்பாது. பெயரளவில் மாநில அரசுகளாய் இருக்கின்ற 25 இந்திய மாநிலங் களும் இது போன்றதொரு சுயாட்சியைக் கோரி போராடத் தொடங்கிவிடும் என்ற உண்மைக்கு இந்தியா அஞ்சுகிறது.

இதன் காரணமாகத்தான் இத்துரோகம் இழைக்கப்பட்டிருக்கி றது. இந்தியா தமிழர்களுக்கு பல துரோகங்களை இழைத்திருக்கிறது. இது கொடிய துரோகம். அமைதிப்படை என்ற பெயரில் தனது கொடுமைப்படையை அனுப்பி தனது சொந்தத் தீர்வை தமிழர்களின் தலையில் திணிக்க முயன்ற இந்தியா அதில் தோல்வி கண்டது. அது போல் இந்தியாவின் புதிய துரோகங்களும் எமது போராளிகளின் மன உறுதிக்கு முன்னால் உருக்குலைந்து போகும் என்பதே காலம் கற்றுத்தரப்போகின்ற உண்மை "உடல் உருக்குலைந்து முகம் எரிந்து இறந்த போனது எங்கள் கிட்டு அல்ல, இந்தியாவே நீதான்" என்று ஒரு தமிழ்க் கவிஞன் கூறியிருப்பதே நிதர்சனமான உண்மை.

ஒரு வீரன் இறந்தால் ஓராயிரம் வீரர்கள் தோன்றுவர் என்றும் போராளிகள் புதைக்கப்படுவதில்லை, விதைக்கப்படுகிறார்கள் என்றும் நாம் கூறிக்கொண்டு எங்கள் மனங்களை திடப்படுத்திக் கொள்கின்ற போதிலும் நாம் ஒரு மாவீரனை இழந்துவிட்டோம். நிரப்பமுடியாத ஒரு இடைவெளி எமக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த மாவீரனுக்கும் அவருடன் இணைந்து தியாகத் தீயில் குளித்திட்ட வீரவேங்கைகளுக்கும் நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலி என்ன?

வெளிநாடுகளில் தமிழராகிய நாம் சிதறுண்டு வாழ்கின்றோம். ஆனால் தமிழீழ தேசிய விடுதலையை நோக்கிய எமது கருத்தும் எமது எண்ணமும் ஒரு போதும் சிதறுண்டு விடக்கூடாது. எங்களுடைய பொது எதிரி சிங்கள பேரினவாத ஏகாதிபத்தியமும் அதற்குத் துணைபோகும் வல்லாதிக்கச் சக்திகளும் தான். அந்த எதிரிக்கு எதிராக நாம் அனைவரும் ஓரணியில் ஒன்றுபட்டு நிற்பதே வீரமர ணத்தைத் தழுவிக்கொண்ட எம் போராளிகளுக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலியாக அமையும்.

மயில்தவராஜன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# அம்மையாய்... அப்பனாய்...

இது ஒரு கட்டுரையல்ல, எண்ணப் பரவல். இங்கு எழுத்தோ எழுதும் விதமோ முக்கியமல்ல. என் உணர்வுகளைப் பகிரவேணும் என்கின்ற உந்துதலின் தொகுப்பு. எனவே என் மனதைத் தொட்டு மையில் கொட்டுகிறேன். இது போல் உணர்வுகள் உங்களுக்குமிருக் கும். ஒப்பிட்டுப் பேசி எம் இதயத் தலைவன் கிட்டண்ணாவின் பெருமைகளை வரலாற்றுத் தொகுப்பாக்க வேண்டும் என்பதே எனது அவா.

சுமார் 15 மாத இடைவேளைக்குப் பின் கிட்டண்ணாவைப் பார்க்கப் போகிறேன் என்ற பாசம், பயணவேகமாக மாற அவரது தங்குமிடத்தில், தாயின் முன்னால் நிற்கும் சிறு குழந்தை போலப் போய் நின்றேன். அதே குறும்புப் பேச்சு, அதே அன்பு மொழியில் என்றும் அழைப்பது போல் "வா மச்சான் வா. அறையில் வெளிச்சம் மங்கலாக இருக்கு, கதவைத் திறந்துகொண்டு வெளியில் போனால் தான் உன்ரை முகத்தைத் தெளிவாய்ப் பார்க்கலாம்" என்றபடியே கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு அறைக்கு முன்பாக இருந்த திறந்த வெளிக்குக் கூட்டிச்சென்று 'என்னடா முகம் கறுத்துப் போச்சு என்ன சந்தோசமில்லை' என்றார். "இனி என்ன? இப்படித் தான்." என்றேன்.

"என்னத்தைச் சொல்ற?" என்றார். "ஊரில வேலைசெய்யிற தைப் போல வருமா?" எண்டன். "அப்ப நீயும் ஊருக்குப் போப்போ றியே, அப்ப நானும் நீயும் வெளிக்கிடுவம்" என்றார். ஊர் என்று சொன்னதும் அவருடைய முகத்தில் ஒருவித மகிழ்ச்சி அலை தோன்றி மறைந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. "போற நேரம் வரேக்கை நாங்கள் போகத்தானே வேணும். இப்ப எங்களிட்ட ஒப்படைச்சிருக்கிற பொறுப்பு, நாங்கள் இருக்கிற நாடுகளில எமது மக்களோடு சேர்ந்து அங்கு விடுதலை விரைவுபெற வேலைசெய்வது இல்லையா?" என்றபடியே நாம் தாய் மண்ணுக்காக எப்படி வேலை செய்கிறோம் என்ற ஆராய்ச்சியில் அவர் இறங்கிவிட்டார். வளர்ச்சி கள், எழுச்சிகள், அன்னிய மண்ணில் ஏற்படக் கூடிய சோர்வுகள், எனக்குத் தனிப்பட்ட முறையில் உள்ள மகிழ்ச்சிகள், கவலைகள் எல்லாவற்றையும் ஒரு குழந்தையும் தாயும் கதைப்பது போல கதைத் தோம். அம்மாவுடன் கதைக்கும் பொழுது குழந்தையின் கதையி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

லேயே இருந்து அந்தக் குழந்தை செய்கின்ற காரியங்கள் சரியா பிழையா என இனங்கண்டு அறிவுரை கூறுவது போல என்னுடைய கதையிலிருந்தே நீ அப்படிச் செய்திருக்கலாம், நீ இப்படிச் செய்யவே ணும், நீ இப்படிச் செய்திருக்கத் தேவையில்லை என்று ஆலோசனை, அறிவுரை, உரிமையுடன் கூடிய பேச்சு என கதை நீண்டுகொண்டு சென்றது. தடி கொடுத்து அடிவேண்டினவன் கதையாக மாறலாம் என சிலவேளைகளில் நான் மௌனமாகிவிடுவேன். "என்ன மச்சான், இயக்கத்துக்கும் உனக்கும் நன்மைக்கெண்டு சொன்னா மூஞ்சையை நீட்டிறா. சொல்லு சொல்லு மச்சான்." என்பார். நான் சிரிப்பேன். இன்னொரு கோணத்தில் லண்டனிலுள்ள அவரது நண்பர்கள், அன்பர்கள் ஒவ்வொருவர் பற்றியும் விசாரிக்கத் தொடங்கிவிடுவார். அதிலும் தகடு கொடுத்து வில்லங்கத்துள் மாட்டிவிடுவேன் என எச்சரிக்கையாகி விடுவேன். "அண்ணை நான் என்னவோ சொல்லப்போக என்னவோ கோணத்தில பாக்கி றீங்கள்." என்று சொன்னால், "நான் ஒவ்வொருவரையும் நேசிக்கி றன். அவர்கள் தெரிஞ்சும் தெரியாமலும் செய்கிற செயல்களால் விடுதலையின் நோக்கம் சிலவேளைகளில் திசைமாறி விடலாம். ஆனபடியால் ஒவ்வொருவருக்கும் இப்பிடி இப்பிடி நடக்க வேண்டும் என்று சின்னச் சின்னப் பிரச்சினைகளிலும் சொல்லிப் போட வேண்டும். இது இயக்கமல்லோ. யாராய் இருந்தாலும் அவை யவை ஒழுங்காய் தங்கட வேலையை செய்து கொண்டிருக்கேக்க ஆராவது ஒருவர் இரண்டுபேர் ஏதாவது பிரச்சினை எண்டாலும் தெரியவரவேணுமல்லோ. ஏதாவது பிரச்சினையெண்டா எல்லோ ருந்தான் பொறுப்பு. இதை உணர்ந்து நீங்களும் நடந்து கொள்ளுங்கோ." என்று அறிவுரை செய்யத் தொடங்கிவிடுவார். இவ்வாறு நான் போன அன்றைய பொழுது கழிந்தது.

மறுநாள் காலை "மச்சானே, மச்சானே, என் ஆசை மச்சானே." என்ற பாடல் கேட்டுக் கண்விழித்தேன். "என்ன யோசிக்கிறாய்? முகத்தைக் கழுவிப்போட்டு வா. இந்தச் சின்ன அறைதான் இப்ப என்ரை உலகம்." என்றவாறு "இப்படிப் போனதடா வாழ்க்கை" என்பார். அந்த நேரம் ஒரு சுதந்திரப் பறவை. சந்தர்ப்ப சூழ்நிலையால் கூண்டுக் கிளி வாழ்க்கை வாழ்வதன் வெறுப்பு அவரது வார்த்தை களில் வெளியாவதைப் பார்த்தேன். இது நடந்து இரு மாதங்கள் கூட ஆகவில்லை. அந்த அதிர்ச்சிச் செய்தி என் இதயத்தைச் சுக்குநூறாக்கியது. இந்தியாவின் அடாவடித்தனம், "நான் ஊருக்குப் போனால் புதிய சரித்திரம் படைப்பேன்." என்ற மனஉறுதியுடன் தாயகத்தின் அமைதி வாழ்வுக்கு உழைப்பதற்காகச் சென்ற உத்தமன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தனது உயிரை சக தோழர்கள் 9 பேருடன் தற்கொடையாக்கிட வைத்தது. இது ஒரு அப்பட்டமான இந்தியாவின் ஆக்கிரமிப்பு. சர்வதேசப் பாசையில் கடற்கொள்ளை, "தனது நெஞ்சில் தன் உயிர் பிரிந்ததை பார்த்தவரில்லை. என் உயிர் பிரிவதைப் பார்த்திருந் தேன்." என்கின்ற கவிதைக்கு இலக்கியமாகிவிட்டது. கிட்டண்ணா பிரிந்தாரா? இல்லவே இல்லை. தமிழீழ நோக்கில் அக்கறையுள்ள பல்லாயிரம் என்போன்ற நெஞ்சங்களில் விடுதலை தெய்வமாக வாழ்வதற்காக தமிழீழத்தைத் தாலாட்டும் இந்துமாகடலின் உப்பு நீரிலே தன் யாக்கையைக் கரைத்துள்ளார் என்பதே உண்மையாகும்.

இந்நிலையில் கிட்டண்ணா, கிட்டு மாமா, கிட்டு என்றெல்லாம் தமிழீழ மக்களால் அன்பாக அழைக்கப்பட்டு அவர்களது தலைவ னாகவும், அவர்களது தளபதியாகவும், அவர்களது குடும்பத்தில் ஒருவராகவும் நிற்கின்ற தன்மையைப் பெற சதாசிவம் கிருஷ்ணகு மார் அவர்களால் எப்படி முடிந்தது?



கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுடன் தளபதி கிட்டு

1978ம் ஆண்டில் தமிழீழ விடுதலைத் தீ மூண்டெழுந்த நேரம் வெங்கிட்டு என்ற இயக்கப் பெயருடன் 18 வயதுத் தமிழீழ இளைஞன் ஒருவன் தன்னை விடுதலைப் புலியாக்கிக் கொண்டான். அவன் உண்மையிலேயே தான் சூரப்புலி என்பதைத் தன் தாக்குதல் திறத் தால், தலைமை மேல் கொண்ட பற்றால், தன் தன்னலமற்ற

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

போக்கால் நிரூபித்தான். தலைவர் பிரபாகரன் தன் உற்ற துணைவர்களில் ஒருவராக அவரைக் கட்டி அணைத்தார். யாழ். தளபதி கிட்டுவாக வெங்கிட்டு புகழ்பெற்றார். யாழ். தளபதியாக கிட்டு விளங்கிய காலத்தில் கிட்டு இருக்கும் வரை சிங்கள இராணுவம் தமிழ்ப் பிரதேசங்களை ஒரு பொழுதும் ஆக்கிரமிக்கமுடியாது என தமிழ் மக்கள் பெருமை கொள்ளும் அளவுக்கு எங்கணும் சுழன்று சுழன்று தாக்குதல்களை நடாத்திய வீரன் அவர். அன்று இயக்கம் வளர்ச்சி பெற்றுக்கொண்டிருந்த காலம். ஆயுதப் பலத்தைப் போராளிகளே உருவாக்கவேண்டிய நேரம். இதனாலேயே இன்று இயக்கத்தின் முன்னணியில் இருப்பவர்கள் எல்லாம் கிட்டுவின் சாமர்த்தியமான வழிகாட்டலும், இயக்க வளர்ச்சிக்கான காரணங்களுள் ஒன்று என்று கூறுவதைக் காணலாம். துரதிஸ்ரவசமாக காலை இழக்க வேண்டி வந்த போதிலும் மனஉறுதியை இழக்காது அந்தப் பெரும் விபத்திலிருந்து எழுந்து அதைவிட வேகமாகப் போராளிகளுக்குப் பயிற்சி அளித்ததும் இயக்கத்தைக் கட்டி எழுப்பியதும் உலகில் உடல் ஊனமுற்றோர்களுக்கு ஒரு பெரும் முன்னுதாரணமாகத் திகழ்ந்தது. தலைவன் ஆணையேற்று மருத்துவ வசதிக்காக லண்டன் வந்தார் கிட்டு. லண்டனில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலகத்தின் பொறுப்பாளராக பெரும் பணி ஏற்றார். ஒரு இராணுவத் தளபதி என்றால் கரடுமுரடான போக்கு, கண்டிப்பு, பிடிவாதம் போன்றவைதான் இருக்கும் என எதிர்பார்க்கும் உலகு. ஆனால் அமைதியான, அன்பான ஒரு பண்பாளனாக, எதையும் கேட்டு பொறுமையுடன் அதனை ஏற்றும் நிராகரித்தும் தன் நிலையை விளக்கும் ராஜதந்திரியாக விளங்கினார். அரசியல் கருத்துக்களை, கேள்விகளை தன்னுடைய பாணியிலேயே தெளிவுபடுத்துகின்ற ஒரு சிந்தனாவாதியாக கிட்டு பரிணமித்தார். எல்லாவற்றிற்கும் மேலாக புலம்பெயர்ந்த ஒவ்வொரு தமிழீழக் குடிமகனையும் தன்னுடைய சொந்தச் சகோதரனாகக் கருதி அவனுடைய நல்வாழ்வுக்கும் நாட்டின் பெருவாழ்வுக்கும் அவனை ஒரு கருவியாக மாற்றும் காந்தசக்தி கிட்டுவிடம் காணப்பட்டது. இந்த உயர் பண்புகளால் வயது முதிந்தோரும் வயதில் இளையோரும் கிட்டுவை "கிட்டண்ணா! கிட்டண்ணா!" என்று மரியாதைப் பெயர்கொண்டு அழைக்கத் தொடங்கினர். அவரது உள்ளத்தில் கபடம் கிடையாது. கோபம் வந்தால் பொங்கி எழுவார். பாசம் வந்தால் கட்டியணைப்பார். நெற்றிக்கு நேர் பேசுவார். மறுநிமிடம் அதை மறந்து இயக்கப் பணியில் எல்லோரையும் ஒரே சமத்துவத்துடன் நோக்குவார். இவ்விதம் சொல்லும் செயலும் ஒன்றாக இருக்கும் அவரது பண்பே, புலம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பெயர்ந்து தாய்மண்ணை மறக்க முயன்ற நூற்றுக் கணக்கான தமிழ் நெஞ்சங்களில் மன மாற்றத்தை ஏற்படுத்தியது. அவரது குழந்தைத் தனமான தூய உள்ளம் சிறு குழந்தைகளைக் கண்டதும் அவர்களுள் ஒருவராக அவரை மாற்றிவிடும். "கிட்டு மாமா கிட்டுமாமா" என்று சுற்றிச் சுற்றி வளைய வரும் காட்சியை காண்பவர்கள் உண்மையான கிட்டுமாமாவின் குழந்தைத் தனத்தைப் புரிந்துகொள்வர்.



சுவிஸ் பொதுக்கூட்டமொன்றில்.

இத்தகைய கருணையும், அன்பும் அவரிடத்தில் இருந்ததினால் தான் அவர் கூறியது போல "ஒடுக்குமுறைகளுக்கும் அடக்குமுறை களுக்கும் எதிராகப் போராட" அவரைத் தூண்டியது. இந்தத் தன்னலமற்ற தன் இன நலம் நாடும் பண்புதான் இன்று அவர் உயிரையே தற்கொடையாக தமிழீழ மண்மீட்புக்கு அர்ப்பணிக்கச் செய்துள்ளது.

எனவே ஒடுக்குமுறைக்கும் அடக்குமுறைக்கும் எதிராகப் போராடும் சக்திகள் உள்ளவரை கேணல் கிட்டு அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுபவராகவும், புதுத் தென்பு கொடுப்பவராகவும், தன்னலமறுப்பை பயிற்றுவிப்பவராகவும், தன் இன நல உணர்வை தூண்டுபவராகவும் திகழ்ந்து கொண்டேயிருப்பார். ஆகவே தமிழீழத்தில் மட்டுமல்ல; தமிழ் கூறும் நல்லுலகில் மட்டுமல்ல; எங்கெல்லாம் அடக்குமுறைகளுக்கும், ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான போராட்டம் நடக்கின்றதோ அங்கெல்லாம் கேணல் கிட்டு தலைவனாக ஒளிவீசிக் கொண்டே இருப்பார்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம். அதுவே
கிட்டண்ணாவின் ஆத்மாவின் ராகம்.

ஜெயம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஒரு கண்ணோட்டம்

# மேலைத்தேச நவீன அரசியல் சிந்தனைகள் தமிழர் போராட்டத்தில் இடம்பெறுவது ஒத்திவைக்கப்பட்டுவிட்டது.

- விசாகன் -

விசாகன்: உங்கள் இயக்கத்தின் கொள்கைகளை முழுமை யாக ஏற்றுக்கொள்ளவில்லை. இது பற்றி எனக்கு பல கருத்து வேற்றுமைகள் உண்டு. ஆனால் சுதந்திரத் தமிழ் ஈழத்தை அமைக்கும் சகல பலமும் கொண்டு எமது மக்களைக் காப்பாற்ற உங்களால் மட்டுமே முடியும் என்பது எனது கருத்து. இதனாலேயே உங்களை நான் ஆதரிக்கிறேன்.

திரு கிட்டு: "எங்கள் இயக்கத்திற்கு பல விதமான தரப்புக் களில் இருந்தும், பல் வேறுவடிவங்களிலும் ஆதரவு கிடைக்கிறது. நாங்கள் நடத்தும் போராட்டம் எமது விருப்பு வெறுப்புக்களையும் மீறி, திடீர் திடீரென சில முடிவுகளை நாம் எடுக்க நிர்ப்பந்திக்கின் றது. எமது தலைமைப்பீடம், இலட்சியத்தை அடையவும் மக்களைப் பாதுகாக்கவும் இராணுவ ரீதியாக எவ்வாறு விரைந்து செயல்பட வேண்டும் என்ற விடயத்திலும் திறமையான தகுதிகளைக் கொண்டுள்ளது என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. போர்க்கால தந்திரங்கள் உலகின் சகல நாடுகளினாலும் பின்பற்றப் படுபவை. அவை உடனடியாக கடும் விமர்சனத்தைப் பெறுகின்றன. அவை அமைதிச் சூழல் ஏற்பட்டதும் கைவிடப்பட்டு ஓர் நீதியான சமுதாயம் ஏற்பட்டமையை உலகப் போர் வரலாறுகளிலிருந்தும் உலகின் மிகச்சிறந்த புரட்சிகள் தந்த படிப்பினைகள் மூலமும் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

எமக்கு ஆதரவு தருபவர்களுள் உங்களைப் போன்ற நிலைப் பாடுடையவர்கள் பலர் உள்ளனர். நாங்கள் போராட்ட காலத்தில் இருந்து இன்று வரை நடந்த சம்பவங்கள், மாற்றங்கள் என்பவற்றைச் சிந்திப்பதுண்டு. பல கசப்பான சம்பவங்களும், மிகக் கவலை தரும் நினைவுகளும் என் நினைவுக்கு வரும். ஆனால் எமது இயக்கம் பல மாற்றங்களையும், சீர்திருத்தங்களையும் செய்துள்ளதை என்னால் நன்கு உணரமுடிகிறது. ஆனால் மேலும் பல மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பதை மனம்திறந்து ஏற்றுக்கொள்ளும் அதேவேளை,


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அவை பற்றிய முடிவுகளை களத்தில் போராட்ட நிலைமைகளை நடாத்திக் கொண்டிருப்பவர்களாலேயே இன்றைய காலகட்டத்தில் எடுக்க முடியும் என்பதும் நீங்கள் கவனிக்கவேண்டிய முக்கியமான விடயமாகும். எனவே வெளியில் நின்று வெறும் விமர்சனத்தோடு காலம் கழிப்பவர்களைவிட நீங்கள் கூறிய நிபந்தனைகளோடு எமக்கு ஆதரவுகளைத் தருவீர்களேயானால் எமக்கு உற்சாகம் கிட்டு வதுடன் நீங்கள் கூறும் அறிவுரைகளும் எமக்கு வழிகாட்டல்களாக அமையும்."

இதுதான் திரு. கிட்டுவை நான் முதல் முதலாகச் சந்தித்த பொழுது இடம்பெற்ற உரையாடலாகும்.



இதன் பின் ஏறத்தாழ ஒரு வருடத்திற்கு மேலாக பல தடவை கள் அவர் லண்டனை விட்டுச் செல்லும் வரை அவரைச் சந்தித்துள் ளேன். ஒவ்வொரு தடவை சந்திக்கும் பொழுதும் அவரிடம் பல வழிகளிலும் வளர்ச்சிகள் இடம்பெற்றுள்ளதை அவதானிக்கமுடிந் தது. அரசியல், பொருளாதாரம், வரலாறு முதலிய துறைகளில் பல அரிய நூல்களை அவர் கற்றது மட்டுமல்லாது இத்துறைகளில் அனுபவம் மிக்கவர்கள் பலருடன் அவர் நெருங்கிப் பழகியுமிருந்தார். அவரைப் பார்க்கச் சென்று திரும்பிய பல கற்றவர்கள் ஈழத்தில் தள அனுபவசாலியான கிட்டு மேலைத்தேசக் கருத்துக்களை கற்றுக் கொண்டு இருக்கிறார், இவர் மட்டும் நாடு திரும்புவாரேயானால்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எமது சமுதாயத்தில் பல புரட்சிகர மாற்றங்கள் இடம்பெறும் எனவும் என்னிடம் கூறியிருந்தனர்.

மேலும் இவரது லண்டன் வருகை வெறும் கிட்டுவின் வருகையாக இருக்கவில்லை. களத்தில் தள அனுபவங்களின் வருகையாக வந்து மேற்கு நாடுகளில் வாழும் எம் மக்களிடையே போராட்டம் பற்றியும் ஓர் அறிவு ஏற்பட வழிவகுத்ததுடன் மேற்கு நாடுகளில் தமிழ் மக்களிடையே ஓர் விழிப்புணர்வு ஏற்படவும் வழிகோலியது.

வளரும் நாடுகளில் இருந்து மேற்கு நாடுகள் வந்து கல்வி கற்றுத் திரும்பிய பல தலைவர்கள் தமது நாடுகளில் பல அடிப்படைச் சீர்திருத்தங்களைச் செய்தமையை நாம் அறிவோம். கிட்டு அவர்கள் லண்டனில் இருந்த காலத்தில் உலகின் பல்வேறு நாட்டு விடுதலைப் போராளிகளையும், அவர்கள் அனுபவங்களையும் தெரிந்து வைத்திருந்தார். லண்டன் பல்கலைக் கழகத்திற்கு விஜயம் செய்திருந்த திரு. மக்டொவல் என்னும் ஓர் எழுத்தாளர் கிட்டுவைப் பற்றி பின்வருமாறு. என்னிடம் குறிப்பிட்டமை கவனிக்கத்தக்கது.

"நான் எனது புத்தகம் சம்பந்தமாகப் பலரைச் சந்தித்து வருகிறேன். அரசியல்வாதிகளில் இருந்து அறிஞர்கள் வரை கிட்டுவைத் தமக்குத் தெரியும், கிட்டுவுடன் கலந்துரையாடியிருக்கிறேன் என்றெல்லாம். என்னிடம் குறிபிட்டுள்ளனர்." என்றார்.

"கிட்டு மேற்கு நாட்டிற்கு வந்து சுகபோகங்களைக் கண்டுவிட்டார். இனி நாடு திரும்பமாட்டார்." எனப் பந்தயம் கட்டத் தயாராக இருந்த ஒரு சிலர் அவரது அஞ்சலி ஊர்வலத்தில் கலந்துகொண்டு தாம் கூறியவை மிகவும் தவறு எனக்கூறி மனம் வருந்தி, அவர் உண்மையிலேயே ஓர் உன்னதமான இலட்சிய புருஷன் என்றனர்.

இந்து சமுத்திரத்தில் முடிந்துவிட்ட கிட்டுவின் வாழ்க்கைப் பயணம் அவரது உயிரின் தனி இழப்பல்ல. எமது தாயகம் சென்று பல முன்னேற்றங்களை எமது சமூகத்தில் ஏற்படுத்த இருந்த ஓர் உயிரின் இழப்பு. கருத்து முரண்பாடுகளால், வேறு இயக்க உறுப்பினர்களாக இருந்த பலர் மீண்டும் ஓரணியில் இருந்து தமிழ் ஈழத்தை அமைத்து தமிழரை இனச்சங்காரத்தில் இருந்து காப்பாற்றக்கூடிய அவரது முயற்சிகள் நாட்டைச் சென்று அடைவதும் இவர் இழப்பால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

□□



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# வீரம் வளையாது!

செவிப்பறைகளைக் கிழித்துக் கொண்டு...
"அச் செய்தி..."
கண்ணீர் தோய்ந்த "அந்தச் செய்தி"

"கிட்டண்ணா வீரச்சாவு"

மெய் நடுக்கம்;
இதயத்தை எடுத்து வைத்து,
சம்மட்டி கொண்டு அறைந்தது போன்ற கொடும் உணர்வு.
நாடி நரம்புகள் விம்மிப் புடைத்தன.
கண்கள் பனித்துக், காதுகள் அடைத்தன.

"கிட்டண்ணா இறந்துவிட்டார்"
இதயச் சிதறல்கள் அழுதன;
குருதி வடித்தன.

எங்கள் தேசத்தில்
இந்திய அரசின் சதிப்பசிக்கு பெரும் தீனி.

இந்திய அரசு சிரித்தது;
அதன் கோரப் பற்களும் குருதி வடித்தன.

நாங்கள் அழுதோம்!
மெய் உருகிக் கண்ணீர் வடித்தோம்.
"இரத்தம் தோய்ந்தது தை 16"

இந்து மாகடலில்,
அலையின் ஆர்ப்பரிப்பை ஊடறுத்து அண்ணனின் படகு;
அமைதித் திட்டத்தைச் சுமந்தபடி அண்ணன்,

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அண்ணனைச் சுமந்தபடி படகு,
படகினைச் சுமந்தபடி அலைகள்....

ஈழக்கரை நோக்கி "ஒலிவ்" கிளையோடு வெண்புறா.
பொறுப்புக்கள் நிறைந்த பயணம்....
போறுக்குமா?
அமைதியைப் பழித்து, அதர்மத்தை வளர்ப்பவர் பொறுப்பரோ?
சுற்றிவளைத்தனர்; குறிவைத்தனர்.
எட்டி நின்று கட்டளையிட்டனர்.

"சரணடை"

காற்றைச் சுருட்டி கைப்பிடிக்குள் அடக்குகின்ற
வல்லமை யார்க்குண்டு?

மூச்சாய் எரிகின்ற பெருந்தீயை வாயாலே
ஊதி அணைக்கின்ற சாத்திரங்கள் யார் கற்றவர்?

ஆர்ப்பரித்து எழுகின்ற ஆழ்கடலின் பேரலையை
சுட்டுவிரல் நீட்டி அடக்கும் வகை யார் உணர்ந்தார்?

எல்லையின்றி விரிந்து கிடக்கின்ற வான்பரப்பை
வில்லாய் வளைக்கின்ற வித்தையினைப் புரிந்தவர் யார்?

"சரணடை!"
இந்திய ஏவல் நரம்பு புடைக்கக் கட்டளையிட்டது.

வானம் எதிரொலிக்க அண்ணனின் குரல்,
"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

நெஞ்சை நிமிர்த்தி, கையை உயர்த்தி
உலகம் அதிர அண்ணன் உரைத்தான்:
"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அன்னையின் குரலொற்றித் தோழர்கள்;
நெஞ்சம் விம்ம,
ஒன்றாய், ஓர் குரலாய்...
"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

கந்தகப் புகை,
தீநாக்கு,
அலையின் குமுறல்
காற்றின் ஒப்பாரி.....

உடைறுத்து எழும் வீரப்பிரகடனம்
முடிவின்றி எதிரொலிக்கும்.
விடுதலை வேண்டி உயர்ந்த கரங்கள்
விலங்குகள் சுமக்கச் சம்மதியா.

- ஜெயா -

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# விடுதலையின் வித்தோன்று

திட்டமிட்டு எம்மினத்தைத்
தீர்ப்பதென்று
முப்படையும் சேர்ந்து நின்று
முடிவெடுத்த நேரம்
கப்பலது கரையை நோக்கிக்
கடுங்கணைகள் வீச
வட்டமிட்டு வானூர்தி
சுட்டுவழி சமைக்க
கொட்டு முரசு கொட்டிக்
கோட்டை வாசல் திறந்த
துட்டகைமுனுவின் வாரிசுகள்
கிட்டு என்ற பெயர் கேட்டுக்
கிலிகொண்டோடித்
தட்டுத் தடுமாறித் தடம்புரள வைத்தான்.

எத்தனங்கள் எத்தனையோ செய்ததுண்டு; எதிரி
முத்தவெளிப் புற்றரையைத் தொட்டதில்லை
முற்றுகையை முன்னெடுத்தே இவன்
வெற்றியினைப் பெற்றெடுத்தான்.
புத்துணர்வை எமக்களித்துப் புகழ்
புலிக்கொடியைப் பறக்கவிட்டான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கட்டுடைய படையணிகள் கல்வி
திட்டமிடல் நிர்வாகம்
அத்தனைக்கும் வித்திட்டான்; கயவர்
விட்டெறிந்த கைக்குண்டு
பட்டதனால் காலிழந்தான; இன்று
கப்பலுடன் ஒன்றாகிக்
கடலோடு கலந்திட்டான்
உத்தமராம் காந்தி
புத்தபிரான் தோன்றிப் பரி
சுத்தமான தேசம்
சத்தமின்றிச் செய்த
சதியாலே தீயில் அஸ்தமனம் ஆகிவிட்டான்; எம்மை
அழுது தினம் வாடவிட்டான்.

- ஈழவன் -

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




கிட்டண்ணாவின் ஓவியங்கள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# ஓயாமல் அலையெழும்

வங்கக் கடலும் ஒருமுறை
அதிர்ந்து போயிருக்கும்
எங்களின் மனதைப் போல.

சமாதானம் சுமந்த
வெள்ளைப் புறா
இந்திய சதியில் சிறகினை இழந்து
கடலின் சிதையில் கரைந்து போனது
கிட்டு அண்ணாவும் ஒன்பது தோழருமாய்.

"என்ன அம்மான்
எப்படி....?"
வார்த்தைகளால் மனதையும்
கைகளினால் தோளையும்
தொட்டணைத்து
வருடிவிட்ட குரல்
இனி என்றைக்கும் கேளாது.

வார்த்தைகள், வர்ணங்கள்
எழுத்துக்கள், பேச்சுக்கள்
எல்லாமே மிக மிக ஆழமாய்
இலட்சிய உறுதியைப் போல்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விடுதலைத் தீயை அணைத்திட
யார்க்கும் முடிந்ததாயில்லை;
எரியும்
நெஞ்சோடு நினைவெல்லாம்
பற்றிப் பரவி
வாழ்வை நேசிக்கும்
மானிட மனமெல்லாம்
ஜுவாலித்துக் கொழுந்துவிடும்.

நீள. நெடும் பனையென
எழுகின்ற கடலலையாய்
மீண்டும் மீண்டும் ஓயாமல் எழும்.

- கஜன் -

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# "இரத்தத்தில் தோய்ந்த அசோகச் சக்கரம்"

## தளபதி கிட்டு: சில பதிவுகள்

### 16.01.1993

இந்துக் கடலும் சோகத்துடன் தனது உடலை அசைத்திருக்கும். தமிழீழ மக்களின் விடிவு குறித்த நினைவுகளைத் தாங்கி வாழ்ந்த கேணல் கிட்டுவினதும் ஏனைய ஒன்பது போராளிகளினதும் சாவு தனது மடியிலேயே நிகழ்ந்தமையினை எண்ணி வேதனையில் கண்ணீர் வடித்து வாடித் துவண்டிருக்கும்.

ஆம்

இந்திய அரசின் சதிச்செயலுக்குத் தமிழீழம் மீண்டும் விலை கொடுத்திருக்கின்றது. தமிழீழத்தின் விலைமதிப்பற்ற உயிர்களை, விடுதலை வேண்டிய நெஞ்சங்ளை இந்தியா பலியெடுத்திருக்கின்றது. சமாதானச் சக்கரம் என்று கூறப்பட்ட அசோகச் சக்கரம் சுற்றுகின்ற வேகத்தில் தொடர்ந்தும் நாம் இழப்புக்களைச் சந்திக்கவேண்டித்தான் உள்ளது.


ஆனால் இந்த இழப்புக்கள் வீணே போய்விடாது. இவை தமிழீழம் என்ற தேசத்திற்கு இடப்படும் உரமாகவே அமையும். இந்தியச் சதியால் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட தளபதி கேணல் கிட்டுவையும் ஏனைய 9 போராளிகளையும் நினைவுகூர்ந்து, தளபதி கிட்டு தொடர்பான சில பதிவுகளை ஆரம்பிக்கின்றேன்.

□□□

**1987**ம் ஆண்டு ஆவணி மாதம் 2ம் திகதி, இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின் தலைவர் பிரபாகரன் தமிழீழ மண்ணில் போரா ளிகளுடனும் மக்களுடனும் மீண்டும் இணைந்துகொண்ட தினம். டெல்லி அசோகா ஹோட்டலில் 'சிறை' வைக்கப்பட்டிருந்த தலை வர் தமிழீழ மக்களின் உணர்வு மயமான போராட்டத்தின் பின்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இந்தியாவிலிருந்து தமிழீழ மண்ணுக்கு அழைத்து வரப்பட்டிருந்தார். அன்று தலைவருடன் தளபதி கிட்டுவும் தமிழீழம் திரும்பியிருந்தார்.



அன்றைய தினம் பிற்பகல் யாழ். குடாநாட்டின் சில பகுதிகளில் விடுதலைப் புலிகளினால் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் போராளிகள் தரப்பிலிருந்து விடுக்கப்பட்ட முதலாவது ஊரடங்கு உத்தரவும் இதுதான் என்றே நினைக்கின்றேன். முக்கியமாக பலாலியிலிருந்து சுதுமலை வரை (தலைவர் பிரபாகரனை சுதுமலையில் வைத்தே இந்திய உலங்கு வானூர்தி மூலம் இந்தியாவுக்கு அழைத்துச் சென்றிருந்தனர். அதனால் அதே இடத்தில் வைத்தே தலைவரைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என விடுதலைப் புலிகள் உறுதியாக இந்தியத்தரப்புக்குக் கூறியிருந்தனர்.) தலைவர் அழைத்து வரப்பட்ட வழிகளில் இவ் ஊரடங்கு உத்தரவு இருந்தது.

இவ் ஊரடங்கிற்கான உத்தியோக பூர்வ காரணம் எதுவும் அறிவிக்கப்படவில்லை. எனினும் ஏதேனும் 'சதி' காரணமாக தலைவருக்கு உயிராபத்து ஏற்படாமல் நிலைமையினை பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காகவே இவ் ஊரடங்கு என்று பலராலும் அனுமானிக்கப்பட்டது.

பலாலியிலிருந்து சுதுமலைவரை வீதியின் இருமருங்கும் விடுதலைப் புலிகளின் போராளிகள் ஆயுதம் தரித்து அணிவகுத்து நிற்க, இந்தியக் கவச வாகனங்களில் தலைவரும் ஏனைய போராளிகளும் அழைத்து வரப்பட்டு சுதுமலை அம்மன் கோவில் முன்றலில் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். வீதியின் இருமருங்கிலும் போராளிகள் அணிவகுத்து நின்றதில் பாதுகாப்புக் காரணங்கள் மட்டுமன்றி தமிழீழ மக்களின் முன்னணிப் படையின் பலத்தினை இந்தியத்தரப்புக்கு எடுத்துரைக்கும் நோக்கமும் இருந்தது என்றும் சில அவதானிகளால் அப்போது சுட்டிக் காட்டப்பட்டது.

அப்போது 'ஈழமுரசுவில்' உதவி ஆசிரியராக இருந்த நான் தலைவர் வருகை குறித்த செய்திகளை அடுத்தநாட் பத்திரிகைக்கு



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தொகுத்துக் கொடுத்துவிட்டு இரவு 11 மணி போல் வீடு திரும்பிக் கொண்டிருந்தேன்.

மக்கள் மனங்களில் இயக்கம், ஒப்பந்தம் குறித்து என்ன முடிவு எடுக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஒப்பந்தத்தினை விடுதலைப் புலிகள் உடனடியாக முறித்து விடப்போவதில்லை என்றே எனது கணிப்பு இருந்தது. இவ் யோசனைகளுடன் எனது மிதிவண்டியில் கோவில் வீதியால் சென்று கொண்டிருக்கும்போது ஒரு வெள்ளைக் கார் எனது மிதிவண்டியின் அருகில் 'பிறேக்' அடித்து நின்றது.

மிதிவண்டியினை நிறுத்திவிட்டு காரை நோக்கி எனது பார்வையினைத் திருப்பினேன். உள்ளே சாரதி ஆசனத்தில் சிரித்த படி 'என்ன அம்மான், எப்பிடி?' என்றவாறு உரையாடலை ஆரம் பித்தார் தளபதி கிட்டு. எமது உரையாடல் முக்கியமாக ஒப்பந்தத் தைச் சுற்றியும் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு பற்றியுமே இருந்தது. தலைவரின் வருகையின் பின் மேற்கொள்ளப்பட்ட கலந் தாலோசனையுடன் ஊடாக எடுக்கப்பட்ட ஒப்பந்தம் குறித்த முடிவு டன்தான் தளபதி கிட்டு தளம் திரும்பிக் கொண்டிருந்தார். ஒப்பந்தம் குறித்த விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை எனக்கு முதன் முதலில் தெரிவித்தவரும் அவர்தான்.

"இந்த ஒப்பந்தம் எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால் இவ் ஒப்பந்தத்துடன் இணைந்து செல்ல மறுத்தால் இந்திய இராணுவத்துடன் மோதலில் இறங்கவேண்டி வரும்; அதை நாம் விரும்பவில்லை. எனவே ஒப்பந் தத்தோடு இணைந்து செல்வதற்கும் ஆயுதங்களை ஒப்படைப்பதற்கும் தீர்மானித்திருக்கின்றோம்."

□□□

இந்தியாவின் நலன்களை மையமாகக் கொண்டு போராளிகள் தரப்புடன் கலந்தாலோசிக்காது மேற்கொள்ளப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தம் தமிழீழ மக்கள் மீது திணிக்கப்பட்டபோது கூட இந்தியாவுடனான மோதலைத் தவிர்க்கவே விடுதலைப் புலிகள் விரும்பியிருந்தனர்.

1987ம் ஆண்டு ஆவணி மாதம் 4ம் திகதி தலைவரால் மேற்கொள்ளப்பட்ட சுதுமலைப் பிரகடனத்திலும் இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயுதங்களை இந்தியாவின் நிர்ப்பந்தத்தால் ஒப்படைக்கின்றமையினால், ஆயுதங்களை ஒப்படைக்கின்ற அதே

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வேளை தமிழீழ மக்களின் பாதுகாப்பினையும் இந்தியாவிடம் கைய ளிக்கின்றோம் என்றும் தலைவர் அப்பிரகடனத்தில் குறிப்பிட்டிருந் தார்.



சுதுமலைப் பிரகடனத்தின்போது தேசியத் தலைவருடன் தளபதி கிட்டு

ஒப்பந்தத்துடன் இணைந்து செல்லும் முடிவும் ஆயுத ஒப்ப டைப்பும் விடுதலைப்புலிகளால் மனம் விரும்பிச் செய்யப்பட்ட தொன்றல்ல என்பது உண்மையே. மக்களின் உரிமைகளை வென்றெ டுத்துத் தரமுடியாத ஒப்பந்தத்துடன் இணைந்து செல்வதென்பதனை யும் மக்களின் பாதுகாப்புக் கவசமாக இருந்த ஆயுதங்களை ஒப்ப டைப்பதென்பதனையும் மக்களையும், மண்ணையும், போராட்டத்தை யும் நேசிக்கும் போராளிகளால் எப்படி மனம் விரும்பி ஏற்றுக் கொள்ள முடியும்.

1987ம் ஆண்டு ஆவணி மாதம் 5ம் திகதி பிற்பகல் முதலாவது ஆயுதக் கையளிப்பு நடைபெற்றது. அன்று காலை தலைவர் பத்திரி கையாளர்களைச் சந்தித்தார். இச்சந்திப்பில் உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டனர். இச் சந்திப்பில் தளபதி கிட்டுவும் கலந்து கொண்டார்.

இச்சந்திப்பில் கலந்துகொண்ட பத்திரிகையாளர் ஒருவர் தலை வரிடம் "என்ன மிக வாட்டமடைந்தவர்களாகக் காணப்படுகிறீர்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கள்?" எனக் கேட்டபோது 'விருப்பமற்ற ஒன்றைச் செய்யவேண்டி இருக்கும்போது எப்படி மகிழ்ச்சியாக இருக்கமுடியும்?' எனப் பதிலளித்தார் தலைவர்.

மக்களதும் போராளிகளதும் தியாகத்தினையும் இரத்தத்தினையும் தனது சொந்த நலன்களுக்காக இந்தியா பயன்படுத்த முயன்றபோது கூட இந்தியாவுடன் மோதலைத் தவிர்க்கவே விடுதலைப் புலிகள் விரும்பியிருந்தனர். இந்தியாவின் திணிப்பை ஏற்றுக் கொள்ள முடியாது, ஜீரணிக்க முடியாது தவித்தபோதும் கூட இந்தியாவுடன் மோதலைத் தவிர்க்க வேண்டும் என்ற முடிவுடனேயே விடுதலைப்புலிகள் செயற்பட்டனர் என்பதனை வலியுறுத்தவே இச்சம்பவங்களை இங்கே குறிப்பிடுகின்றேன்.

ஆனால் இந்தியா வல்லரசுத் தனத்துடன், அதிகார வெறியுடன் தான் செயற்பட்டது. விளைவு ஒரு எல்லைக்கப்பால் மோதலைத் தவிர்க்கமுடியாமல் போய்விட்டது. இதனால் ஏற்பட்ட யுத்தத்திற்கும் விடுதலைப்புலிகள் முகம் கொடுக்க வேண்டியதாயிற்று.

இந்தியாவுடன் முரண்படவேண்டிய நிலை ஏற்பட்டது குறித்து, பின்னர் தளபதி கிட்டு இவ்வாறு எழுதினார்.

"..... விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை இந்தியாவினுடைய பாதுகாப்பைப் பொறுத்த விடயங்களில் இந்தியாவிற்கு எதிரான கொள்கையுடையவர்கள் அல்ல. தெற்காசியப் பகுதியில், இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவின் முதன்மை நிலையை எப்போதும் அங்கீகரித்து வந்துள்ளனர். மேலும் இந்து சமுத்திரத்தைச் சமாதானப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தியிருக்கும் இந்தியாவின் கொள்கையையும் ஆதரித்து வந்திருக்கின்றனர். வேறு ஒரு வல்லரசு இப்பிராந்தியத்தில் புகுந்து இந்திய மண்ணின், மக்களின் பாதுகாப்புக்கு குந்தகமாக இருப்பதை ஆதரிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ போவதுமில்லை. ஆனால் இந்தியா வல்லரசுத் தன்மையோடு தமிழர் பிரச்சினையை அணுகும் போது அக்கொள்கையை எதிர்த்து நிற்கவேண்டிய தார்மீகக் கடமை விடுதலைப் புலிகளைச் சார்கின்றது...."

□□□

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இந்திய வல்லரசுப் பூதம் பலத்த அடி வாங்கியிருக்கின்றது. அதே நேரம் எம்மவர் பலரின் உயிரினையும் விழுங்கியிருக்கின்றது. இப் பூதத்தின் பசிக்கு இறுதி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

யாக இரையாகியிருப்பவர்கள் தளபதி கிட்டுவும் ஒன்பது போராளி களும்.

ஏன் இப் பூதம் எம்மவர் மீது குறிவைக்கின்றது?

இந்தியாவுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் முரண்பாடு ஏற்படு வதற்குரிய அடிப்படைக் காரணங்களை நோக்கும் போது இக்கேள் விக்குரிய விடை இலகுவாகிவிடும்.

'இந்திய ஆளும் வர்க்கம், ஆட்டுவிக்கின்ற பொம்மைகளாக இருக்கவேண்டும்; அவர்களது நலன்களுக்கேற்ற ஒரு தீர்வினை இலங் கைத் தமிழர் பிரச்சினைக்கான தீர்வாகக்கொள்ள வேண்டும்; சுயப லத்தில் இயங்கும் சக்தியாக இருக்கக்கூடாது' இவை தமிழீழப் போராளிகள் தரப்பிலிருந்து இந்தியாவின் எதிர்பார்ப்புக்கள்.

'நீண்டகால இனப்படுகொலையிலிருந்து தமிழ் மக்களை விடு வித்து, அவர்களை சுதந்திர மக்களாக்க வேண்டும்; தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமை வென்றெடுக்கப்பட வேண்டும். சுயபலத் தில் இதற்கான போராட்டத்தினை நடாத்தும் அதேவேளை இந்தியா வின் அங்கீகாரத்தினையும் உதவியையும் பெற்றுக்கொள்ள முயல வேண்டும். அவர்களின் கைப்பொம்மைகளாகக் கூடாது.' இவை இந்தியாவுடனான உறவில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு.

இவைபோதும் இந்தியாவும் விடுதலைப்புலிகளும் முரண்பட வேண்டிய நிலை ஏற்பட்டதற்கான அடிப்படையினைப் புரிந்து கொள்ள.

விடுதலைப் புலிகளைத் தவிர்ந்த ஏன்னயவர்கள் இந்தியாவின் எதிர்பார்ப்பினைப் பூர்த்திசெய்து கொண்டார்கள். விடுதலைப்புலி கள் தமிழீழ மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை கொடுத்தார்களே யன்றி, இந்திய நலன்களுக்காகத் தமிழீழ நலன்களை விலைபேசத் தயாராக இருக்கவில்லை.

இருந்தும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலமும் இந்திய இராணுவத்தினைப் பயன்படுத்தியும் விடுதலைப் புலிகளை வெற்றி கொண்டு தனது அபிலாசைகளைப் பூர்த்திசெய்ய முயன்றது இந்தியா.

இந்தியாவின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக தமிழீழத்தில் இரா ணுவ, அரசியல், இராஜதந்திர ரீதியில் இந்தியா பலத்த தோல்வியி னைச் சந்தித்தது. இத் தோல்வியினை இந்திய ஆளும் வர்க்கத்தினால்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை. உண்மையில் இத்தோல்வி அவர்களால் ஜீரணித்துக் கொள்ள முடியாத ஒன்றுதான்.



தேசியத் தலைவருடன் தளபதி கிட்டு

தனது ஒரு மாநிலத்தினை விடவே மிக மிகக் குறைவான மக்கள் தொகையினைக் கொண்ட, மிக மிகச் சிறிய நிலப்பரப்பினைக் கொண்ட ஒரு மக்கட் சமூகம், இந்தியாவின் முழுமையான பலத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு இராணுவ நடவடிக்கையிலிருந்து உயிர்ப்புடன் மீண்டது மட்டுமன்றி, இந்திய வல்லாதிக்கப் போக்குக்கு பலத்த அடியினையும் கொடுத்தமையினை இந்திய ஆளும் வர்க்கத்தால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தன்னால் முன்வைக்கப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தமே தீர்வாக இருக்கவேண்டும்; அப்போதுதான், தான் இழந்த கௌரவத்தினைத் திரும்பிப்பெற முடியும்; தனது நாட்டில் உள்ள மாநிலங்கள் கூடுதலான அதிகாரங்களையோ, அல்லது தனி அரசுக் கோரிக்கையினையோ எழுப்பாமல் இருக்கும். இது இன்று இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த இந்தியாவின் நிலைப்பாடாக இருக்கலாம்.

இந்நிலைப்பாட்டிற்கு செயலுருவம் கொடுப்பதற்கு தேவையான அழுத்தங்களை சிறிலங்கா அரசதரப்பிற்கும் விடுதலைப் புலிகளின் தரப்பிற்க்கும் இந்தியா பிரயோகித்துக் கொண்டுதானிருக்கும்.

இதன் அடிப்படையில், இந்திய நலன்கள் என்று இந்திய ஆளும் வர்க்கத்தால் கணிக்கப்படுவனவற்றை அடைந்துகொள்ளும் நோக்கி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

லான, இந்தியாவின் கறைபடிந்த செயற்பாட்டில் தளபதி கிட்டு உட்பட்ட பத்துப் போராளிகள் இறுதியாகப் பலியாகியிருக்கின்றனர்.

இந்தியா தனது பலத்தினைப் பிரயோகித்து வல்லாதிக்க நோக்கினை நிறைவேற்றிக்கொள்ள முயலலாம்.

ஆனால்..

வரலாற்றில் வல்லரசுகளின் விருப்பங்கள் மட்டும்தான் நிறை வேறியதாகப் பதிவுகள் இல்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் அர்ப்ப ணிப்பு மிக்க போராட்டங்கள் வெற்றிகொண்டதாயும் பதிவுகள் நிறையவே உள்ளன.

□□□

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தளபதி கிட்டுவுக்கு ஒரு முக்கியமான இடம் இருக்கின்றது. போராட்டத்தின் வளர்ச்சிக் கும் வெற்றிக்கும் தளபதி கிட்டு ஆற்றிய பணிகள் பல தளங்களைக் கொண்டவை.




யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதலின் பின்

ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் கெரில்லாத் தந்தி ரோபாயத்தினைப் பயன்படுத்தியபோது ஏனைய இயக்கங்களின், முக்கியமாக PLOTE இன் கண்டனத்திற்குள்ளானது. முன்னர்

கெரில்லா முறையிலான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த PLOTE, தனது இயலாமையினை மறைக்கவோ என்னவோ 'அடித்து விட்டு ஓடி மறைதல்' (HIT AND RUN TACTICS) மக்களுக்கு இழப்பினை ஏற்படுத்துகின்றது; முழுமையான தயாரிப்பினை மேற்கொண்டு ஓரேயடியாகத் தாக்கவேண்டும் என்ற ரீதியிலான பிரச்சாரங்களை மேற்கொண்ட காலம் அது. கெரில்லாத் தாக்கு தலை விடுதலைப்புலிகள் மேற்கொள்ளும் போது சிறிலங்கா இரா ணுவம் மக்கள் மீது பழிவாங்கும் நோக்குடன் மேற்கொள்ளும் தாக்குதல்களால் ஏற்படும் இழப்புக்களுக்கும் இவர்கள் விடுதலைப் புலிகளையே குற்றம் சுமத்துவர்.

இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே கெரில்லாத் தந்திரோபாயத் தினூடாகப் போராட்டத்தை வளர்த்தெடுக்கும் பணியினை மேற்கொள்ளவேண்டியிருந்தது. யாழ். குடாப் பகுதியினைப் பொறுத் தவரை தளபதிகள் பண்டிதர், கிட்டு ஆகியோர் இப்பணிக்கு தலைமை வகித்து வந்த வேளையில் 9/1/1985 அன்று பண்டிதரைப் பறிகொடுக்க வேண்டியதாயிற்று.

அதன் பின் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மக்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையினை ஏற்படுத்தும் நடைமு றைக்குத் தளபதி கிட்டு தலைமை வகிக்கத் தொடங்கினார்.



திரு மாத்தையாவுடன் தளபதி கிட்டு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தாக்கிவிட்டு பின்வாங்கும் முறையின் அடுத்தகட்ட வளர்ச்சி யாக ஒரு பாரிய தாக்குதலை நடாத்திவிட்டு எதிரி பழிவாங்கும் போது மீண்டும் எதிர்த்தாக்குதல் நடாத்தும் நடைமுறையினை விடு தலைப் புலிகள் ஆரம்பித்தனர். 1985ம் ஆண்டு சித்திரை மாதம் நடாத்தப்பட்ட யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதலின் போது இத் தந்திரோபாயம் பயன்படுத்தப்பட்டது. இதற்கும் தளபதி கிட்டுவே தலைமை தாங்கினார்.

இந்நிலையின் வளர்ச்சிக்கட்டமாக யாழ். குடாநாட்டினை கட்டுப்பாட்டுப் பிரதேசமாக்கும் நடைமுறை ஏற்பட்டது. திம்புப் பேச்சுவார்த்தையின் போது ஏற்பட்ட யுத்த நிறுத்தம் சிறிலங்கா தரப்பால் மீறப்பட்டதனைத் தொடர்ந்து பேச்சுவார்த்தையும் முறிந் தது. அதன்பின் யாழ். குடாநாட்டின் இராணுவ முகாம்களில் இருந்து இராணுவம் வெளிவர முயலும்போது அவர்களை எதிர் கொண்டு தாக்கி, மீண்டும் முகாம்களுக்குள் முடக்கி கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினை உருவாக்கிய பணிக்கும் தளபதி கிட்டுவே தலைமை வகித்தார். அப்போது ஏனைய ஓரிரண்டு இயக்கங்களும் இராணுவத் தினை எதிர்க்கும் பணியில் ஈடுபட முன்வந்த போதும், விடுதலைப் புலிகளே முன்னணியில் நின்று இராணுவத்தினை விரட்டியடிப்பர்.

"ஆமி வெளிக்கிட்டிட்டுதாம்" என்ற கதை வரும்போது "யுத்த முனையில் கிட்டு மாமா முன்னணியில் நிற்கிறார்." என்ற சேதியும் சேர்ந்துதான் மக்களுக்கு வரும். (அப்போது பலர் தளபதி கிட்டுவை கிட்டு மாமா என்றே அழைப்பர். கிட்டுவினை விட வயது குறைந்த வர்கள் மட்டுமல்ல வயது கூடியவர்களும் அவரை அப்படி அழைப் பதுண்டு.)

தளபதி கிட்டு யுத்த முனையில் முன்னணியில் நிற்பது மக்க ளுக்கு நம்பிக்கையினைக் கொடுக்கும்; போராளிகளுக்கு உற்சாகத்தி னைக் கொடுக்கும். சில சமயங்கள் இராணுவத்தினை எதிர்க்கும் பணியில் தளபதி கிட்டு கட்டளை பிறப்பித்த வண்ணம் முன்னேறும் போதும் மக்கள் கூட்டம் அவரைப் பின் தொடர முற்படுவதுண்டு. அம் மக்கள் கூட்டத்தினை அகற்ற வேண்டிய ,சிரமமும் விடுத லைப் புலிகளுக்கு ஏற்படுவதுண்டு.

குடாநாட்டினைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தமை தொடர்பாக வேறு இயக்கத்தைச் சேர்ந்த ஒரு முக்கிய போராளி என்னிடம் கூறிய கூற்றினை நினைவு கூரல் பொருத்தம்.

"கிட்டு களத்தில் முன்னணியில் நின்று போராளிகளை உற்சா


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கப்படுத்தி இராணுவத்தினை எதிர்க்கின்றமையினாலேயே இன்று குடாநாட்டினைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க முடிகின்றது. அவர் மிகவும் திறமை வாய்ந்தவர். அவரது திறமையினைக் கண்டு நாம் பொறாமைப் படக்கூடாது. அவரைப் போல நாமும் வளர வேண்டும் என்றே நினைக்கவேண்டும்."

ஏனைய இயக்கங்களில் இருந்தவர்களில் எத்தனை பேர் இவ்வாறு நினைத்தார்கள் என்பது கேள்விக்குறியே. தளபதி கிட்டு வின் திறமையில் பலருக்கும் நம்பிக்கை இருந்தது என்பது உண்மை.

மிகக் குறைந்த ஆள், ஆயுத பலத்துடனேயே தளபதி கிட்டு யாழ். குடாவினைப் போராளிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.

பல சமயங்களில் மனோதத்துவ ரீதியில் இராணுவத்திற்கு அச்சத்தினை ஏற்படுத்தி அவர்களை முகாம்களுக்குள் திருப்பி அனுப்பும் தந்திரோபாயத்தினைப் பிரயோகித்தார். ஒரு மரபு ரீதி யான இராணுவத்தினை குறைந்த ஆள், ஆயுத பலத்துடன் முகாம் களுக்குள் முடக்குவது என்பது இலகுவான பணியல்ல. இதற்குப் பல்வேறு தந்திரோபாயங்களைப் பயன்படுத்தவேண்டி ஏற்படும். அத் தந்திரோபாயங்களில் வெற்றியும் காணவேண்டும். அப்போதுதான் இராணுவத்தின் மனோபலத்தினைக் குறைவடையச் செய்து அவர் களை பலவீனமான நிலையில் வைத்திருக்க முடியும். தளபதி கிட்டு இப்பணியை மிக வெற்றிகரமாகச் செய்து வந்தார்.

1987 இல் துரோகிகள் வீசிய கைக்குண்டினால் தனது ஒரு காலினை இழக்கும் வரையும் கிட்டு எனும் படைத் தலைவன் மக்களைப் பாதுகாத்து போராட்டத்தினை முன்னெடுக்கும் பணியில் முன்னணியில் நின்றான். தனது காலினை இழந்த பின்பும் கூட, 'ஒப்பரேசன் லிபரேசன்' இராணுவ நடவடிக்கையின் பின், ஏனைய காவலரண்களில் நிற்கும் போராளிகளை உற்சாகப்படுத்த களத்திற் கும் சென்று வந்தார் தளபதி கிட்டு. கிட்டுவும் யுத்த முனையில் நிற்கின்றார் என்ற செய்தி மக்களுக்கு புதிய உற்சாகத்தினை அளித் தமையினையும் அவதானிக்க முடிந்தது.

தளபதி கிட்டுவின் வெற்றிக்கும், அவர் மீது போராளிகளும், மக்களும் வைத்த நம்பிக்கைக்கும் களத்தில் முன்னே நிற்கும் அவரது பண்பு முக்கிய காரணமாயிருந்தது. ஒரு தடவை தொண்ட மானாற்றுப் பகுதியில் நடைபெற்ற மோதல் தொடர்பாக தளபதி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கிட்டு என்னோடு உரையாடுகையில் குறிப்பிட்டவற்றை நினைவு கூர்தல் பொருத்தம்.

"இராணுவத்தின் தாக்குதல் பலமாகவே இருந்தது. போராளிகளுக்கும் அத்தாக்குதலை எதிர்த்து முன்னேறி இராணுவத்தினை விரட்டி அடிப்பது சிரமமாகவே இருந்தது. யுத்தமுனைக்குச் சென்ற நான் முதல் ஆளாக நின்று இராணுவத்தினை எதிர்கொண்டு ஆறு, ஏழு இராணுவத்தினரை விழுத்தி முன்னேற, போராளிகளும் உற்சாகத்துடன் முன்னேற, எல்லாருமாகச் சேர்ந்து இராணுவத்தினரை விரட்டி அடித்தோம்."

□□□

**1987**ம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்பு தளபதி கிட்டுவுக்கு தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இருந்த பங்கு தளப்பிரதேசத்தினை உருவாக்கியது தொடர்பானது மட்டுமல்ல. தமிழீழ



விஜயகுமாரதுங்கவுடன் தளபதி கிட்டு


விடுதலைப் போராட்டத்தினை சர்வதேச மயப்படுத்தியமைக்கும் தளபதி கிட்டுவுக்கு உறுதியான பங்கு இருந்தது. மன்னாரில் விடுதலைப் புலிகளால் யுத்தக் கைதிகளாக்கப்பட்ட இரண்டு இராணுவத்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தினரை முன்வைத்து மேற்கொள்ளப்பட்ட கைதிகள் பரிமாற்றம், விஜயகுமாரணத்துங்க முதலாய சிங்கள மக்கள் மத்தியிலும், சர்வ தேச அரங்கிலும் தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான செய்திகளை நிலைபெற வைத்தன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நிதித் தேவைக்கும், சுய பொருளாதார வளர்ச்சிக்கும் உதவும் நோக்குடன் உற்பத்தித் திட்டங் களுக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்பட்டார் தளபதி கிட்டு. முகாம்களில் போராளிகள் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் நிலைமையினைத் தோற்றுவித்தார். உற்பத்திப் பொருட்கள் போரா ளிகளினால் வீடு, வீடாகக் கொண்டுசென்று விற்பனை செய்யப்பட் டதுடன், விடுதலைப் புலிகளினால் உருவாக்கப்பட்ட நியாயவிலைக் கடைகளிலும் அவை விற்பனை செய்யப்பட்டன. கோவில் உற்ச வங்களின் போது உள்ளூர்ப் பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து விற்பனைக் காட்சிச் சாலைகள் அமைக்கப்பட்டன.




பண்டிதர் சரணாலயம்

அப்போது அரசியல் பொறுப்பாளராக இருந்த திலீபன் பல திட்டங்களை மேற்கொள்வதற்கு தளபதி கிட்டுவின் ஒத்துழைப்பும் ஆதரவும் இருந்தது. 'களத்தில்' பத்திரிகை உருவாக்கம், 'சுதந்திரப் பறவைகள்' பெண்கள் அமைப்பின் உருவாக்கம் உட்பட பல செயற்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

திட்டங்கள் தளபதி கிட்டுவின் அனுசரணையுடன் மேற்கொள்ளப் பட்டது.

குழந்தைகளின் மனோவளர்ச்சியினை கருத்திற்கொண்டு உரு வாக்கப்பட்ட 'பண்டிதர் சரணாலயம்', முரளியின் தலைமையில் இயங்கிய விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினால் புனித சம்பத்தரிசியார் கல்லூரியில், 1986 இல் நடாத்தப்பட்ட மாபெரும் கண்காட்சி என்பவற்றிலும் தளபதி கிட்டுவின் பங்களிப்பு பூரணமாக இருந்தது.




நியாயவிலைக் கடை

இராணுவ ரீதியான செயற்பாடுகளுக்கு அப்பால், தமிழீழ மக்களை விடுதலைப் போராட்டத்துடன் இணைப்பதற்குத் தேவை யான பல்வேறு செயற்பாடுகளையும் தளபதி கிட்டு தமது தலைமை யின் கீழ் மேற்கொண்டிருந்தார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தளபதி கிட்டுவின் தலை மையில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளைப் பட்டியலிடுவது எனது நோக்கமல்ல. ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 'கிட்டு' எனும் தலைவனின் பங்களிப்பின் விசாலத்தினைப் புரிந்து கொள்ள இவை உதவும்.

□□□

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

**1987**ம் ஆண்டு ஆவணி மாதம் 2ம் திகதி இந்தியாவில் இருந்து தலைவருடன் களம் திரும்பிய கிட்டு இந்திய தமிழீழ யுத்தம் ஆரம்பமாகு முன்னர் மீண்டும் இந்தியா திரும்பியிருந்தார். அதனால் யுத்தம் ஆரம்பமாகிய போது அவர் யுத்த முனையில் நிற்கவில்லை.

இந்திய தமிழீழ யுத்தம் உக்கிரமாக நடைபெற்ற காலத்தில் தளபதி கிட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். எனினும் வீட்டுக் காவலில் இருந்த வண்ணம் இவ் யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்குடனான சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார்.

இச் சமாதான முயற்சிகளில் ஈடுபட்ட தளபதி கிட்டு இந்திய அரசின் நேர்மையற்ற சமாதான நாடகங்களினால் எதுவித பயனையும் அடையமுடியாதவராய் தோல்வியினைத் தழுவினார். இது தொடர்பாக பின்னர் ஒரு தடவை என்னிடம் கூறும் போது, "தமிழ் மக்களுடைய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இந்திய அரசுடன் சமாதானம் பேசமுடியும் என்ற நம்பிக்கை தலைவருக்கு இருக்கவில்லை. இருந்தும் எனது முயற்சிக்குத் தலைவர் தடையாக இருக்கவில்லை. இறுதியில் தலைவரின் கூற்றுக்களே உண்மை என்பதனை எனது சமாதான முயற்சி எடுத்துக் காட்டியது" எனக்குறிப்பிட்டார்.

இந்தியாவில் இருந்த காலத்தில் தளபதி கிட்டுவும் ஏனைய போராளிகளும் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். தாம் குற்றம் செய்திருந்தால் அவற்றை வெளிப்படுத்த வேண்டும் அல்லது தமிழீழத்திலுள்ள தமது போராளிகளுடன் தம்மைச் சேர்ப்பிக்கவேண்டும் எனக் கோரி தளபதி கிட்டு சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டார்.

இதன் விளைவாக தளபதி கிட்டுவும் ஏனைய போராளிகளும் இந்தியாவினால் தமிழீழம் அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு தளபதி கிட்டுவும் அங்கவீனமுற்ற ஒரு சில போராளிகளும் (எண்ணிக்கை சரியாக நினைவில் இல்லை) விடுவிக்கப்பட ஏனையோர் ஈழமண்ணின் இந்தியச் சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

தளபதி கிட்டு விடுதலை செய்யப்பட்டதிலும் ஒரு சதி உள்ளது. அப்போது கைக்கூலிகளாக இருந்து அட்டகாசம் புரிந்து வந்த EPRLF இன் தலைமை அலுவலகம் இருந்த 'அசோகா' ஹோட்டலில் இருந்து சில யார் தூரத்திலேயே யாழ். வைத்தியசாலைக்கு முன்பாக தளபதி கிட்டுவும் அவருடன் விடுதலை செய்யப்பட்ட ஏனைய போராளிகளும் இந்தியப் படையினரால் இறக்கிவி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

டப்பட்டனர். தாம் இறக்கிவிட்டுச் செல்ல EPRLFஇனர் இவர்களைப் பலிகொள்ளட்டும் என்ற எண்ணம் இந்திய தரப்புக்கு இருந்திருக்க லாம். (ஏனெனில் வழமையாக கைதிகளை விடுதலை செய்யும்போது மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கும் பழக்கம் இருந்தது. தளபதி கிட்டுவின் விடயத்தில் இந்த நடைமுறை பின்பற் றப்படவில்லை.)

ஆனால் யாழ். வைத்தியசாலை இணைப்பதிகாரி நச்சினார்க்கி னியார் உட்பட மக்கள் அவரின் கவசமாயினர். தளபதி கிட்டு மீண்டும் போராளிகளுடன் இணைந்துகொண்டார்.

அந்தத் தடவை மக்கள் நடுவே இந்தியச்சதி தோல்வியில் முடிந்தது. இத்தடவை அலைகடல் நடுவே...

□□□

**1989**ம் ஆண்டு தளபதி கிட்டு லண்டன் வந்துவிட்டார் என்ற சேதி கேட்டு அவருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டேன். போராட்டத்தின் நிலை குறித்து நிறையவே பேசினார். 1987ம் ஆண்டின் பின், ஏறத்தாழ இரண்டு வருடங்களின் பின் அவருடன் உரையாடக் கிடைத்த சந்தர்ப்பம் இது. அவரது பார்வை நன்கு விசாலமடைந்திருந்ததை அவ் உரையாடலில் நான் உணர்ந்து கொண்டேன்.

தளபதி கிட்டுவின் சர்வதேசப் பணி மிகவும் முக்கியம் வாய்ந்தது. 1990ம் ஆண்டு யூன் மாதம் 11ம் திகதி வெடித்த இரண் டாம் கட்ட ஈழப்போரின் பின், சர்வதேச சமாதான முயற்சிகள் தொடர்பாக விடுதலைப்புலிகள் தரப்புடன் தொடர்புகொள்ள விரும்பிய சர்வதேச அமைப்புக்கள், பிரமுகர்கள் அனைவருக்கும் அவரது தொடர்பு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. சமாதான முயற்சி தொடர்பான ஊக்கத்தினையும் அளித்தது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு சர்வதேச அங்கீகா ரத்தை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகள் குறித்து தளபதி கிட்டு மிகுந்த ஊக்கம் செலுத்தினார். இதற்குப் போராளிகள் தரப்பிலிருந்து ஆற்றவேண்டிய பணிகள் பற்றிய எண்ணங்கள் என்றும் இவரது நெஞ்சிலே தவழ்ந்துகொண்டிருந்தன. மீண்டும் ஒரு சமாதான முயற்சி ஏற்படின் அதில் இராஜதந்திர வெற்றியினை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் ஆழமான பார்வை



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அவருக்கு இருந்தது. அதற்கான செயற்திட்டங்களும் அவரிடம் இருந்தது.



சர்வதேச நாடுகளின், அமைப்புகளின் தொடர்புகள் மட்டுமன்றி புலம் பெயர்ந்து வாழும் தமிழர் சமூகத்தினை தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் இணைப்பதிலும் தளபதி கிட்டு முக்கிய கவனம் செலுத்தினார். மேலைத் தேசங்களின் தொழில்நுட்பங்களையும், வளங்களையும் ஈழ மண்ணுக்கு பொருத்தமான வகையில் பிரயோகித்து தமிழீழத்தின் அபிவிருத்தியினைத் துரிதமாக்கவேண்டும் என்பதில் அவருக்கு மிகுந்த அக்கறை இருந்தது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைக்கக்கூடிய அனைவரையும் இணைத்து செயற்படவேண்டும் என்பதில் அவருக்கு மிகுந்த ஆவல் இருந்தது. பல்வேறு துறைகளிலும் திறமை மிகுந்தவர்களிடம் அவருக்கு மிகுந்த மரியாதை இருந்தது. தமிழீழ நாடக நெறியாளர்களில் முதன்மையான இடம் வகிக்கக்கூடிய தாசீசியஸ் அவர்களிடம் தளபதி கிட்டு வைத்திருந்த மதிப்பினையும் மரியாதையையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம். இதனை அவருடன் கூட இருந்த காலங்களில் என்னால் உணர முடிந்தது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சர்வதேச செயற்பாடுகளில் ஈடுபட்டு சர்வதேச அரசியலின் நெளிவு சுழிவுகளை அனுபவ ரீதியாக உணர்ந்து கொண்டவராக, சர்வதேச நாடுகளின், அமைப்புக்களின் ஆலோசனைகளை உள்ள டக்கிய ஒரு சமாதான முயற்சியின் தூதுவராக தமிழீழம் திரும்பி தலைவருடனும் ஏனைய தளபதிகளுடனும் கலந்துரையாடி, தமிழீழ மக்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழிகோலவேண்டும் என்று நெஞ்சம் நிறைந்த எதிர்பார்ப்புடன் சென்றுகொண்டிருக்கும் போது.....

□□□

தளபதி கிட்டு, இயக்கத்தில் இருந்தவர்கள் இயக்கத்தினை விட்டு விலகித் தனிப்பட்ட வாழ்வில் ஈடுபட்டுக்கொண்டிருந்தாலும் அவர்கள் செயற்திறன் மிக்கவர்களாக, ஒழுக்கம் மிக்கவர்களாக வாழவேண்டும் என்ற எதிர்பார்ப்பினைக் கொண்டிருந்தார். இயக்க வாழ்வு அவர்களை முழுமையான மனிதர்களாக உருவாக்கியிருக்கும் என்ற கருத்து அவரிடம் இருந்தது. இதனால் இயக்கத்தில் இருந்தவர் கள் ஏதாவது தவறு செய்தால் அவரிடம் இருந்து கூடுதலான கண்டிப்பு இருக்கும். கண்டிப்பு மட்டுமன்றி சரியான வழிமுறையுடன், அரவணைப்புடனான புத்திமதியும் அவரிடம் இருந்து வரும்.

இயக்கத்தில் இருந்து விலகியவர்கள் தொடர்பாகவும் அவரது பார்வை தெளிவாகவே இருந்தது.

"அவர்கள் இப்போது இயக்கத்தில் இருந்து விலகியிருந்தாலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒரு காலகட்டத்தில் அவர்கள் தம்மை அர்ப்பணிக்கத் தயாராகி களத்தில் நின்றவர்கள். அவர்களின் அச் செயற்பாட்டை அவர்கள் போராட்டத்திற்களித்த பங்களிப்பா கவே இன்றும் பார்க்கிறோம்" இவ்வாறு இயக்கத்திலிருந்து விலகிய வர்கள் தொடர்பாக என்னிடம் கருத்துத் தெரிவித்தார்.

எனினும் அவ்வாறு விலகியவர்களில் பலர் வெளிநாடுகளில் போராட்டச் செயற்பாடுகளிலிருந்து ஒதுங்கியிருப்பது தொடர்பான கவலை அவரிடம் நிறையவே இருந்தது. இவ்வாறு ஒதுங்கியிருந்தவர் கள் பலரை போராட்டப் பணிகளில் ஈடுபடுத்தும் முயற்சியில் வெற்றியும் கண்டிருக்கிறார். ஆனால் தமிழீழத்தினை தனது வாழ்நா ளினில் அடைந்திருந்தால் அவர் பட்டிருக்கக்கூடிய ஆனந்தத்தில் ...


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எந்த ஒரு மனிதனைப் போல தளபதி கிட்டுவுக்கும் பலம், பலவீனம் இருந்திருக்கும்; இருந்தது. அவரது பலம், பலவீனம் பற்றி விவாதிப்பது எனது நோக்கம் அல்ல. கிட்டு என்கின்ற மனிதனின் பலம், பலவீனம் என்பதற்கு அப்பால், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் கிட்டு என்னும் தலைவன் ஆற்றிய பங்களிப்புத் தொடர்பாகவும் அவரது நினைவுகள் தொடர்பாகவுமே சில பதிவுகளைச் செய்து வருகின்றேன்.

இருந்த போதும் தளபதி கிட்டு ஒரு தடவை தன்னைப் பற்றிக் குறிப்பிட்டமையினை இங்கு குறிப்பிடுதல் பொருத்தம் எனக் கருதுகின்றேன். இது இந்திய தமிழீழ மோதல் தொடர்பானது. அவர் தனது ஆளுமை குறித்து தனக்குள்ளேயே கேள்விகள் எழுப்பிக்கொண்ட தலைவர் என்பதனை உணர்த்த இது போதுமானது.

"இந்தியாவுடனான யுத்தம் ஆரம்பித்தபோது அந்த யுத்தத்திலிருந்து வெற்றிகரமாக மீளுவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கவில்லை. அதேவேளை இந்திய வல்லாதிக்கப் போக்குக்கு எதிராகப் போராடவேண்டியது அவசியம் என்ற உறுதியான எண்ணம் எனக்குள் இருந்தது. தலைவருக்கு இந் நெருக்கடியிலிருந்து மீள முடியும் என்பதில் உறுதியான நம்பிக்கை இருந்தது. அவரது திட்டங்களின் அடிப்படையில் செயற்பட்டு நாம் இந் நெருக்கடியிலிருந்து, பலம் பொருந்தியவர்களாக மீண்டோம். அப்போதுதான் தலைமைத்துவத்தின் முக்கியத்துவத்தினை ஆழமாக உணர்ந்துகொண்டேன். என்னால் ஒரு சிறந்த போராளியாக இருக்க முடிந்தளவுக்கு ஒரு சிறந்த தலைவனாவதற்கு இன்னும் நீண்ட வளர்ச்சி தேவைப்படும்."

□□□

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தளபதி கிட்டு ஒரு போராளியாய், படைத்தளபதியாய், போர்த்தந்திரியாய், அரசியல் ஞானம் மிகுந்த இராசதந்திரியாய், புகைப்படக் கலைஞனாய், சித்திரக் கலைஞனாய், எழுத்தாளனாய், சிறந்த விமர்சகனாய் இவற்றிற்கும் மேலாய் எம்மைப் பொறுத்தவரையில் சிறந்த தலைவனாய்... இவ்வாறு பல தளங்களில் தனது ஆளுமையினைப் பதித்திருக்கிறார்.

அவர் ஆற்றிய பங்களிப்புக்கள் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், அமையப்போகும் தமிழீழத்தில் அழியாய் நினைவாய் நிலைத்து நிற்கும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விடுதலைப் போராட்டத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிராகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டான 'ஜனநாயக மறுப்பு' என்பது தொடர்பாக தளபதி கிட்டு எழுதியிருப்பது மிகவும் முக்கியம் வாய்ந்தவையாக எனக்குத் தென்படுகிறது. அவற்றையும் குறிப்பிட்டு தளபதி கிட்டு தொடர்பான இப்பதிவுகளை முடிக்கலாம் என நினைக்கின்றேன்.

"... நாம் எல்லோருடைய சுதந்திரத்தினையும் ஜனநாயகத்தினையும் மதிக்கின்றோம்; இவர்களுடைய ஜனநாயக உரிமை எமது மக்களின் விடிவுக்கு குறுக்கே நிற்காத வரை மட்டுமே. இன்று எமது தாயகத்தில் ஓர் புரட்சி நடந்துகொண்டிருக்கின்றது. இந்நிலையில் எதிர்ப்புரட்சியாளர்களையும் துரோகங்களையும் அனுமதிக்க முடியாது. புலிகளுக்கெதிரான கருத்துக்கள் என்பது வேறு; போராட்டத்திற்கெதிரான கருத்துக்கள் என்பது வேறு. ஒரு சிலர் புலிகளை விமர்சிக்கின்றோம் எனக் கூறிக்கொண்டு போராட்டத்திற்கெதிராகவே திசைமாறிப் போவதைக் காண்கிறோம். தமிழீழ விடுதலைப் போராட்டத்தை எதிர்க்கும் ஒரு சிலர் அதை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாமல் புலிகளைத் தாக்கிக்கொள்வ. தனையும் காண்கிறோம். தமிழீழம் அமையட்டும் அனைவருடைய கருத்துக்களையும் அனுமதிப்போம். கட்சிகள் வேண்டுமானாலும் அமைக்கட்டும், சங்கங்கள் வேண்டுமானாலும் அமைக்கட்டும். எதை வேண்டுமானாலும் கூறிக்கொள்ளட்டும். அன்று அதை நாம் அனுமதிக்கத்தான் வேண்டும். அப்போது எந்தக் கருத்தை வைத்தாலும் விடுதலையைக் குழப்பமுடியாத நிலை இருக்கும். கருத்துக்களும் மக்கள் தீர்ப்பும் இவைகள்தான் வரலாறுகளைக் கொண்டுசெல்பவை. தமிழீழம் கிடைத்ததும் இப்படித்தான் எமது வரலாறும் நடைபோடும்...."



தளபதி கிட்டுவின் ஓவியம்

- திலீபன் -



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive